பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00




வலம்புரி

The Valampuri

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | ஆடி 27 | செவ்வாய்க்கிழமை (12.08.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 236

# பிரதமர் ரணிலின் அமைச்சரவைக்குள் பெரும் முறுகல் நிலை; அரசுக்கு ஆபத்து

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் அமைச்சரவைக்குள் ஏற்பட்டிருக்கின்ற முறுகல் நிலையும், குழப்பமும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசுக்குப் பெரும் நெருக்குவாரத்தை ஏற்படுத்தியுள்ளதாக அரசதரப்பை ஆதாரம் காட்டித் தகவல்கள் வெளியாகியுள்ளன. அரசாங்கத்தின் உயர் அதிகாரம் பொருந்திய அமைச்சர்களுக்கிடையே ஏற்பட்டிருக்கின்ற முறுகல் நிலை உச்சக்கட்டத்தை அடைந்திருக்கும் நிலையில் அரசுக்குப் பெரும் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.

பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொடவுக்கும், அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸுக்கும் இடையிலான முறுகல் நிலையும், உட்பூசலும் அதிகரித்து வருகிறது. இதனால், சமாதானப் பேச்சுவார்த்தைக் குழுவில் இருந்து தன்னை விலக்கி விடுமாறும், தான் பொறுப்புக்களில் இருந்து ஒதுங்கப் போவதாகவும் அமைச்சர் மிலிந்த பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதேபோன்று, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனா மீது இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனும், உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவும் எகிறிப் பாய்கின்றனர்.

பதிலுக்கு அமைச்சர் ஜெயலத்தும் மேற்படி அமைச்சர்கள் இருவர் மீதும் பாய்ந்து விழுகிறார்.

இதேவேளை, அரசின் மீது அதிருப்தி கொண்ட நிலையில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தொங்கிக்கொண்டிருக்கிறார். இவர் எந்நேரத்திலும் கட்சிமாறி ஜனாதிபதியுடன் இணையலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறு அமைச்சரவைக்குள் ஏற்பட்டிருக்கின்ற முறுகல் நிலையும் சர்ச்சையும், பிரதமர் ரணிலின அரசுக்கு பெரும் நெருக்குவாரத்தை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரியவருகிறது.

இதேவேளை, ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்குள் ஏற்பட்டிருக்கின்ற தளம்பல் நிலையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ரகசிய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் தகவல்கள் கசிந்துள்ளன.(இ)

# இடைக்கால சபைத் திட்டவரைபை ஆராய புலிகளின் சட்டவல்லுநர்கள் 20-ந் திகதி பாரிஸில் கூடுவர்

## தமிழ்ச்செல்வனுடன் 10 பேர் பாரிஸ் செல்வர்

(நமது நிருபர்)

**இலங்கை அரசினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக சபைத் திட்ட வரைபு குறித்து விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும், அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனும் பிரான்ஸில் இம்மாதம் 20ஆம் திகதி ஆலோசனை நடத்தவுள்ளனர். இவ்வாலோசனைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக வன்னி மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இருந்து 20 பேர் அடங்கிய குழுவினரும் பிரான்ஸ் பயணமாகவுள்ளனர்.**

இடைக்கால நிர்வாக சபை தொடர்பாகத் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் அரசு கையளித்துள்ள திட்டவரைபை பரிசீலனை செய்து அரசுக்கு சமர்பிக்கவுள்ள பதில் யோசனைகள் தொடர்பாக ஆராய்வதற்காக விடுதலைப்புலிகளின் சட்ட வல்லுநர்கள் எதிர்வரும் 20ஆம் திகதி பிரான்ஸில் கூடவுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையில் 10பேர் கொண்ட குழுவினர் வன்னியிலிருந்தும், ஐரோப்பிய நாடுகளில் இருந்து 10பேர் கொண்ட குழுவினரும் பிரான்ஸிற்கு பயணமாகவுள்ளனர்.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் இடம்பெறவுள்ள இக்கலந்துரையாடலில் அவுஸ்ரேலியா,பிரிட்டன், சிங்கப்பூர் மற்றும் பல்வேறு நாடுகளிலிருந்து விடுதலைப்புலி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால சபைக்கு எதிராக கொழும்பில் இன்று ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கிற்கான இடைக்கால நிர்வாக சபையை விடுதலைப் புலிகளுக்கு வழங்குவதன்மூலம் தமிழீழத்தை உருவாக்க அரசு முயற்சி செய்து வருவதாகக் குற்றஞ்சாட்டி இன்று கொழும்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை ஜே.வி.பி. நடத்த உள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச நாணயப் பிரதிநிதி தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

(கிளிநொச்சி)

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஜிலமிகாட்டர் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை நேற்று வன்னியில் சந்தித்து பேச்சுவார்த்தை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சைக்கிள் ~ ஹயஸ்வான் விபத்து குடும்பப் பெண் மரணம்; மகன் காயம்

### முல்லைத்தீவு - பரந்தன் வீதியில் அனர்த்தம்

(கிளிநொச்சி)

சைக்கிளும் ஹயஸ் வானும் நேருக்கு நேர் மோதியதில் குடும்பப் பெண் ஒருவர் பரிதாபகரமாக மரணமானார்.

இவ்விபத்து முல்லைத்தீவு பரந்தன் வீதியில் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் முரசுமோட்டையைச் சேர்ந்த துரைராசா குணமணி (வயது - 38) என்பவரே மரணமானவராவார்.

சைக்கிளை ஓட்டிவந்த பிரஸ்தாபப் பெண்ணின் மகனான துரைராசா யோகேந்திரன் படுகாயம் அடைந்துள்ளார்.

இதேவேளை, இவ்விபத்து இடம்பெற்ற இடத்துக்கு அண்மையில் இடம்பெற்ற மற்றொரு விபத்தில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய மீனவர்களின் அத்துமீறலுக்கு எமது கடற்படையினரே காரணம்

### அகில இலங்கைக் கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்திய மீனவர்களால் வடபகுதி மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்காக அகில இலங்கைக் கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் ஹேமன் குமார நேற்று யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

இங்குவந்த அவர் மாதகல் தொடக்கம் காரைநகர் வரையான கடற்பிரதேசங்களை நேரில் சென்று பார்வையிட்டார். இவற்றைப் பார்வையிட்ட பின்னர் ஹேமன் குமார கருத்துத் தெரிவிக்கையில்,

வடபகுதி கடற்படையினர் தமது கடமைகளைச் சரிவரச் செய்யத் தவறுவதன் காரணமாகவே வடக்கு

(10 ஆம் பக்கம் பார்க்க)

# வடபகுதிக் கடலில் 'யுனிற்றி' கப்பலை கடற்படையினர் தேடிவருகின்றனர்

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவின் உத்தரவையடுத்து 'கொள்ளுனரா யுனிற்றி' என்னும் பெயருடைய பிரயாணிகள் கப்பலை வடபகுதி கடலில் தேடும் பணியில் கடற்படையினர் இறங்கியுள்ளனர். கொழும்பு துறைமுகத்தை அண்டிய ஆழ்கடல் பகுதியில் காணப்பட்ட இந்தக் கப்பல் சட்டவிரோதமான முறையில் ஆட்களை ஏற்றிக் கொண்டு புறப்படுவதற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டிருந்திருக்கலாம் என்றும் கடற்படையினர் எச்சரிக்கையடைந்த போது, வடபகுதி நோக்கி குறித்த கப்பல் விரைந்துவிட்டதாகத் தெரிய வருகிறது.

மேற்படி கப்பலைத் தேடும் முயற்சியில் நெடுந்தீவுக்கு அப்பால் உள்ள கடற்பகுதியிலும், கச்சதீவுக் கடற்பகுதியிலும் கடற்படையினர் தேடுதல்களை மேற்கொண்டுள்ளனர்.

இதுபற்றி மிகவும் அந்தரங்கமான தகவல் தமக்குக் கிடைத்துள்ளதாக தெரிவித்த பாதுகாப்பு அமைச்சர் மேற்படி கப்பல் தென்னாசியாவில் இருந்து 'அகதிகள்' என்ற பெயரில் சட்டவிரோத குடியேற்றகாரர்களை குடியேற்றுவதற்கு வந்திருக்கலாம் எனத் தெரிவித்தார்.

இதுபற்றி பெயர் குறிப்பிடவிரும்பாத சி.ஐ.டி.பிரிவு அதிகாரி ஒருவர் கூறுகையில்,

கொன்ரென்ரா யுனிற்றி கப்பலுக்கும், தரையில் உள்ள நிலையங்களுக்கும் இடையே நடத்தப்பட்ட சங்கேதமொழி பரிவர்த்தனைகள் தெளிவாக்கம் செய்யப்பட்டுப் பார்த்த போது மிக முக்கியமான தகவல் கிடைத்திருப்பதாகத் தெரிவித்தார்.

மாலைதீவு வாசிகளால் ஓட்டிவரப்பட்ட இக்கப்பல் துறைமுகப் பொலிஸாரால் கலைக்கப்பட்டது. (இ)

## வீடுகள் சேதம்

(கொழும்பு)

தென்பகுதியில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக 7 ஆயிரத்து 837 வீடுகள் சேதமடைந்துள்ளதாக சமூக நலன்புரி அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்வீடுகளை திருத்துவதற்கென 75 கோடி 90 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் இதில் 8 கோடி 60 இலட்சம் ரூபா பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் சமூக நலன்புரி அமைச்சு தெரிவித்துள்ளது. (இ-5)

## இலஞ்ச ஊழல் ஆணைக்குழு சட்டமூலத்தில் திருத்தம்

(கொழும்பு)

இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழுவின் சட்டமூலத்தில் திருத்தங்களைக் கொண்டுவருவதற்கு அரசு தீர்மானித்துள்ளதாக சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தமக்கு அரசு ஏற்கனவே அறிவித்துள்ளதாகவும், எதிர்க்கட்சிகளின் ஆலோசனைகளைக் கருத்திற் கொண்டே அரசு இத் தீர்மானத்திற்கு வந்துள்ளதாகவும் கூறியுள்ளார். உயர் நீதிமன்ற நீதியரசரும், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியும் இந்த ஆணைக் குழுவில் இல்லாமையினாலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சட்டமூலத்தின் பிரகாரம் இவர்கள் இருவரும் ஆணைக்குழுவில் இருக்கவில்லை. தற்போதைய நிலையில் மேல் நீதிமன்ற நீதிபதிகளை இந்த ஆணைக்குழுவில் சேர்ப்பதற்கு திருத்தம் கொண்டு வருவதற்காக இவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகவும் சபாநாயகர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-10)

## நல்லையில் இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் ஆலய உற்சவத்தையொட்டி இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் துர்க்கா தேவி மணிமண்டபத்தில் இடம் பெற்றுவரும் தெய்வீக இசையரங்கில் 10ஆம் திருவிழாவான இன்று எஸ்.குமாரசாமியின் பாட்டுக்கச்சேரி இடம்பெறவுள்ளது.

✦ ✦ ✦

நல்லைக் கந்தன் உற்சவத்தையொட்டி யாழ்.மாவட்ட வட பிரதேச இந்துப் பேரவை ஏற்பாட்டில் ஆலயத் தேரடியில் அமைந்துள்ள அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் இடம்பெற்றுவரும் தெய்வீக நிகழ்ச்சி தொடரில் இன்று மாலை 6 மணிக்கு 'சிவகதி தானே' எனும் பொருளில் திருமதி சண்முகதாஸ் சொற்பொழிவாற்றவுள்ளார். (18)

# விளையாட்டுச் செய்திகள்

## சட்டக்கல்லூரி மாணவன் ஆணழகனாகத் தெரிவு

லண்டனில் நடைபெற்ற ஆணழகன் போட்டியில் பிறேஸில் நாட்டின் சட்டக்கல்லூரி மாணவன் மிஸ்ரர் வேல்ட் பட்டத்தைத் தனதாக்கிக் கொண்டுள்ளார். இங்கிலாந்தின் தலைநகர் லண்டனில் கடந்த நான்கு ஆண்டுகளாக ஆணழகர் போட்டி நடத்தப்பட்டு வருகிறது.

2003 ஆம் ஆண்டுக்கான ஆணழகர் போட்டி கடந்த சனிக்கிழமை லண்டனில் நடைபெற்றபோது, 38 நாடுகளைச் சேர்ந்த கட்டிளம் காளையர்கள் இந்தப் போட்டியில் பங்கேற்றனர்.

லெபனான் நாட்டைச் சேர்ந்த அஸாத் 2ஆம் இடத்தையும், பெல்ஜியத்தைச் சேர்ந்த ஹபியன் கஸ்போ 3ஆம் இடத்தையும் இப்போட்டியில் பெற்றுக்கொண்டனர்.

ஹொலிவூட் திரைப்பட நட்சத்திரங்கள் உட்பட ஏராளமான பார்வையாளர்கள் இந்த ஆணழகன் போட்டியைக் கண்டுகளித்தனர். (உ-68)

## 19 வயதுக்குட்பட்ட அணியின் தலைவராக மஸ்ரூப்

பாகிஸ்தானின் 19 வயதிற்குட்பட்ட கிறிக்கெற் அணியுடன் மோதவுள்ள இலங்கை அணி வீரர்களின் பட்டியலை கிரிக்கெற் சபை வெளியிட்டுள்ளது.

அதன்படி,19 வயதிற்குட்பட்ட இலங்கை அணியின் தலைவராக பர்வேன் மஸ்ரூப்பும் உதவித் தலைவராக கங்கண ரத்னாயக்காவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (பி-10)

## ஈச்சமோட்டை அணிக்கு சம்பியன் கிண்ணம்

சுண்டுக்குளி சனசமூக நிலையம் அதன் 75வது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்தி வந்த கரப்பந்தாட்டப் போட்டியின் அரை இறுதி ஆட்டம் கடந்த சனிக்கிழமையும் இறுதி ஆட்டம் கடந்த ஞாயிற்றுக் கிழமையும் சனசமூக ஆடுகளத்தில் நடைபெற்றது.

அரை இறுதி ஆட்டத்தில் கொய்யாத் தோட்டம் சனசமூக நிலைய அணி அதனை எதிர்த்தாடிய கிறீல்பீல்ட் சனசமூக நிலைய அணியை இரு நேர் செற்றுகளில் 15:13 15:11 என்ற புள்ளிகள் கணக்கில் வென்று இறுதி ஆட்டத்திற்கு தகுதி பெற்றது.

இறுதி ஆட்டத்தில் ஈச்சமோட்டை சனசமூக நிலைய அணி அதனை எதிர்த்தாடிய கொய்யாத் தோட்ட சனசமூக நிலைய அணியை இரு நேர்செற்றுகளில்

15:11 15:13 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று சம்பியன் வெற்றிக்கிண்ணத்தைத் தனதாக்கி கொண்டது. (உ-110)

## விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

பாலர் கல்விக் கழகத்தினால் நிர்வகிக்கப்படும் 16 பாலர் பாடசாலைகளுக்கு இடையிலான 38 ஆவது வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை புதன்கிழமை பி.ப. 2.00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் பாலர் கல்விக் கழகத் தலைவர் எஸ்.பி. காசிநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி மா.வேதநாதன் பிரதம விருந்தினராகவும், தமிழர் புனர்வாழ்வுக் கழக மாவட்டப் பணிப்பாளர் சு. ஜெயராஜ் சிறப்பு விருந்தினராகவும், தேசிய கல்வி நிர்வாக சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி க.வில்வநாதன் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (இ-5)

## 3 ஆவது டெஸ்ட் போட்டிக்காக இங்கிலாந்து கிரிக்கெற் அணியில் மூவர் புதிதாக நியமனம்

இங்கிலாந்தில் நடைபெற்றுவருகின்ற தென்னாபிரிக்கா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டித் தொடரில் மூன்றாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 14 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் போட்டிக்காக இங்கிலாந்து அணியில் மூன்று புதிய வீரர்களை இங்கிலாந்துக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை சேர்த்துக் கொண்டுள்ளது.

இதன்படி துடுப்பாட்ட வீரரான எக்ஸ் ஸ்மித், வேகப்பந்து வீச்சாளரான பிளைம்சப்பல் மற்றும் சுழல் பந்து வீச்சாளரான கரிக்பைற்றி ஆகியோர் புதிதான அணியில் சேர்த்துக்கொள்ளப்பட்ட வீரர்களாவர்.

இதேவேளை, கடந்த டெஸ்ட் போட்டியில் விளையாடிய துடுப்பாட்ட வீரர் அன்ரனி மெக்கத்தும், சர்வதேச டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வுபெற்றுள்ள டெறன் கோக்கும் அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

இரு அணிகளுக்குமிடையில் இதுவரை நடைபெற்று முடிந்துள்ள இரண்டு டெஸ்ட் போட்டிகளின்படி தென்னாபிரிக்க அணி 1:0 என்ற நிலையில் முன்னணி வகிக்கின்றது. முதலாவது போட்டி வெற்றி தோல்வி அற்ற நிலையிலும், இரண்டாவது போட்டியில் தென்னாபிரிக்க அணி இங்கிலாந்தை இனிங்ஸினால் வெற்றி கொண்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (பி-68)

## யூலியா கிறிஸ்கோயினா புதிய உலக சாதனை

எட்டு வருடங்கள் பழைமையான பெண்களுக்கான 400 மீற்றர் தடைதாண்டல் போட்டியில் ரஷ்ய வீராங்கனையான யூலியா கிறிஸ்கோயினா புதிய உலக சாதனையொன்றை நிலைநாட்டியிருக்கின்றார்.

ரஷ்யாவில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டி நிகழ்ச்சியொன்றில் 25 வயதான யூலியா 400 மீற்றர் தடைதாண்டல் போட்டியில் 52.34 செக்கன்களில் ஓடிமுடித்து இந்நிகழ்ச்சியில் புதிய உலகசாதனையை நிலைநாட்டியுள்ளார்.

இந்தப் போட்டியில் இதற்கு முன்னர் அமெரிக்காவைச் சேர்ந்த கிம் பெற்றன் 1995ஆம் ஆண்டு சுவீடனில் நடைபெற்ற மெய்வன்மைப் போட்டிகளின் போது 52.61 செக்கன்களில் ஓடிமுடித்து சாதனையைப் படைத்திருந்தார்.

கடந்த 10 வருடங்களின் முன்னர் சர்வதேசப் போட்டியாகச் சேர்த்துக்கொள்ளப்பட்ட 400 மீற்றர் பெண்களுக்கான தடைதாண்டல் போட்டியில் 8 வருடங்களுக்கு முன்னர் நிலை நாட்டப்பட்ட இந்தச் சாதனையை யூலியா கிறிஸ்கோரினா முறியடித்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (பி-68)

## வாரங்களில் 4 உலக சாதனைகள் நீச்சல் போட்டியில் புதிய பாய்ச்சல்

கடந்த 6 வாரங்களுக்குள் ஆண்களுக்கான நீச்சல் போட்டியில் உலக சாதனையை அமெரிக்க வீரரான மைக்கல் பெல்ஸ் நான்கு தடவைகள் முறியடித்து புதிய உலக சாதனையை ஏற்படுத்தியுள்ளார். அமெரிக்கன் தேசிய சம்பியன் சிறப்புப் போட்டியிலேயே இந்த சாதனைகள் நிலைநாட்டப்பட்டிருக்கின்றன.

ஆண்களுக்கான 200 மீற்றர் நீச்சல் ஓட்டப் போட்டியில் 55.94 செக்கனில் நீந்தி முடித்த புதிய உலக சாதனையை இவர் ஏற்படுத்தியுள்ளார்.

18 வயதுகளை நிரம்பிய மைக்கல் பென்ஸ் ஐக்கிய அமெரிக்கத் தேசிய சம்பியன்சிப் போட்டிகளில் இதுவரை 5 தங்கப்பதக்கங்களை வென்றிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இவர் 100 மீற்றர், 200 மீற்றர். 400 மீற்றர் நீச்சல் போட்டிகளிலேயே இந்தத் தங்கப் பதக்கங்களை வென்றுள்ளார். (உ-68)

## பனாமா - ப்பான் போட்டியில் அமெரிக்கா முன்னிலையில்

பனாமாவில் இடம்பெற்றுவருகின்ற ப்பான் அமெரிக்கர்கள் விளையாட்டுப் போட்டியில் இதுவரை நடந்து முடிந்துள்ள நிகழ்ச்சிகளின் படி 121 பதக்கங்களைப் பெறறு அமெரிக்கா தொடர்ந்து முன்னிலை வகித்து வருகிறது.

50 தங்கம், 34 வெள்ளி, 37 வெண்கலம் என்ற அடிப்படையில் பதக்கங்களைப் பெற்று அமெரிக்கா முதன்னிலை வகிக்கும் அதேவேளை 46 தங்கம், 24 வெள்ளி, 25 வெண்கலம் அடங்கலாக 95 பதக்கங்களை வென்றுள்ள கியூபா 2ஆம் இடத்தை வகிக்கிறது.

மேலும், 12 தங்கம், 22 வெள்ளி, 11 வெண்கலம் என 45 பதக்கங்களைப் பெற்றுள்ள கனடா 3ஆம் இடததிலும் மெக்சிக்கோ 4ஆம் இடத்திலும் உள்ளன. இதேவேளை, 8 தங்கப் பதக்கம் உட்பட 46 பதக்கங்களை வென்றுள்ள பிரேசில் 5ஆம் இடத்தில் உள்ளது.

இவ்விளையாட்டுப் போட்டி நிகழ்வில் முதல் இருநாள் போட்டி முடிவில் கியூபா அமெரிக்காவை விட முன்னிலையில் இருந்ததுடன் தொடர்ந்து அமெரிக்காவிற்குப் போட்டியாக பதக்கங்களைப் பெற்று வருவதுடன் தனது திறமைகளை இப் போட்டிகளில் சிறப்பாக வெளிக்காட்டி வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-68)

## ஸ்பானிய கால்பந்தாட்ட கழகம் ஆசிய சுற்றுப் பயணத்தை வெற்றிகரமாக நிறைவேற்றியது

உலகப்புகழ் பெற்ற ஸ்பானிய கால்பந்தாட்டக் கழகமான றியல் மெற்றிற் வெற்றிகரமான முறையில் அதன் ஆசிய சுற்றுப் பயணத்தினை நிறைவு செய்துள்ளது.

இந்தச் சுற்றுப் பயணத்தின் இறுதிக்கட்டமாக தாய்லாந்து சென்ற இவ்அணி தாய்லாந்தின் தேசிய அணியுடன் பாங்கொக்கில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற போட்டியில் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுள்ளது.

பெனான்டோ மெறியன்டஸ் ஹவிய மற்றும் போட்டிலோ ஆகியோர் மூலமாகவே றியல் மெற்றிற் கோல்களைக் பெற்றது.

இந்தப் போட்டியில் பிரபல வீரர்களான றொனால்ட் டினியோ லூயிசிக்கோ ஆகியோர் கலந்து கொள்ளவில்லை.எனினும் றியல் மெற்றிற் கழகத்துடன் அண்மையில் புதிதாக ஒப்பந்தம் செய்திருந்த டேவிற் பெக்கம் மற்றும் சினேடின் சிடோன் ஆகியோர் இப் போட்டிகளில் சிறப்பாக பிரகாசித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-68)

## க.பொ.த. (உ/த)...

யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

*கலைப்பிரிவு*

ஏ.தர்மினி - 3ஏ, எஸ்.றிஸ்கந்தி- 2ஏ,பி, ஆர்.இரட்ணேஸ்வரி - 2ஏ.சி.

*கணிதப்பிரிவு*

என்.கோபிகா - 3பி,

யாழ். கனகரட்ணம் ம.ம.வித்தி

*வர்த்தகப்பரிவு*

ம.ரஜீவ் - 2ஏ, பி, ந.கஜந்தினி - 2ஏ, பி, தெ.நாகதர்சினி - 2ஏ.பி, கா.கஸ்தூரி - 2ஏ.சி.

*விஞ்ஞான பிரிவு*

சத்தியரூபன் - 3பி.

*கலைப்பிரிவு*

அஜித்சஞ்சீவ் - 2ஏ, சி.

## ஊழியர் உரிமைகள் தொடர்பாக

# உச்ச நீதிமன்றம் தெரிவித்த கருத்துக்கு இந்திய சட்டமா அதிபர் கடும் எதிர்ப்பு

## "புரிந்து கொள்ள முடியாதது" என விமர்சனம்

(புதுடில்லி)
தமிழ்நாடு அரச ஊழியர்கள் வேலை நிறுத்தம் தொடர்பான வழக்கில் உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பின்போது ஊழியர்களின் உரிமைகள் பற்றி வெளியிட்டிருந்த கருத்தை இந்திய சட்டமாஅதிபர் சுரப்ஜி கடுமையாக விமர்சித்துள்ளார்.

உச்ச நீதிமன்றத்தின் கருத்து அவசியமற்றது, புரிந்துகொள்ள முடியாதது என்றார் சுரப்ஜி.

அரச ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்ய தார்மீக உரிமையோ, நியாயமான உரிமையோ கிடையாது என்று உச்ச நீதிமன்றம் கூறிய கருத்தை புரிந்து கொள்ள முடியவில்லை என்று சுட்டிக்காட்டிய சுரப்ஜி கூட் டாக பேரம்பேசும் உரிமையும், அதிலிருந்து கிடைத்த வேலை நிறுத்தம் செய்யும் உரிமையும் ஊழியர்களின் மதிப்பு மிக்க உரிமைகளாகும் என்றார்.

எனினும் ஊழியர்களது வேலை நிறுத்தத்தால் பொது மக்களுக்கு மிக மோசமான கஷ்டங்கள் ஏற்படுகின்றன என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளதை அவர் ஏற்றுக் கொண்டுள்ளார்.

அத்துடன், சிறிய காரணங்களுக்காக வேலை நிறுத்தம் செய்யக்கூடாது என்பதும் சரியானதே எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு அரச ஊழியர்களும், பாடசாலை ஆசிரியர்களும் அண்மையில் சில கோரிக்கைகளை முன்வைத்து வேலை நிறுத்தத்தில் குதித்ததும், வேலை நிறுத்தம் செய்த ஊழியர்கள் அனைவரையும் அரசு வேலை நீக்கம் செய்ததும் தெரிந்ததே. அரசின் நடவடிக்கைகளை எதிர்த்து ஊழியர்கள் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். இந்த வழக்கை விசாரித்து உச்ச நீதிமன்றம் வேலை நீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களை மீளவும் சில நிபந்தனைகளின் அடிப்படையில் வேலைக்கு எடுத்துக் கொள்ளும்படி பணிப்புரை விடுத்த அதே சமயம், அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்ய சட்டப்படியோ, தார்மீக அடிப்படையிலோ உரிமை கிடையாது என்று கருத்து வெளியிட்டிருந்தது. (பி-2)

## குடிசையில் குண்டுவெடிப்பு; 20 பேர் பலி; 20 பேர் காயம்

(புதுடில்லி)
குஜராத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவமொன்றில் 20 பேர் உயிரிழந்ததுடன்,மேலும்20 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

குஜராத் மாநிலத்தின அகமதாபாத் நகரில் சன நெருக்கடி மிக்க பிரதேசத்தில் இருந்த குடிசையொன்றிலிருந்தே இக்குண்டு வெடித்துள்ளது.

இதேவேளை இச்சம்பவத்திற்கு எந்தவொரு அமைப்பும் உரிமை கோராததையடுத்து, இப்பகுதியில் கடும் பதற்றம் நிலவியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (பி-2)

## ஜப்பானில் கடும் மழை, சூறாவளி 9 பேர் பலி; 12 பேரைக் காணோம்

(டோக்கியோ)
ஜப்பானில் வீசிய சூறாவளியில் சிக்கி 9 பேர் பலியாகியதுடன், மேலும் 12 பேர் காணாமல் போயுள்ளனர்.

சூறாவளி காரணமாக ஜப்பானில் கடும் மழை பெய்துவருவதுடன், கடல்மட்டம் உயர்ந்து வெள்ள அபாயம் ஏற்படும் நிலை தோன்றியுள்ளது.

இந்த இயற்கை அனர்த்தங்களினால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள ஜப்பானின் வட பகுதித் தீவான கொக்கெய்டோவில் பல வீடுகள் சேதமடைந்துள்ளதுடன். போக்குவரத்துத் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டுள்ளன.

கொக்கெய்டோ தீவின் நகரப் பகுதியூடாக ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் சென்ற வாகனம் ஒன்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (பி-2)

## சார்ஸ் நோயை ஏற்படுத்தும் விலங்குகளைச் சமைத்தவர் கைது

(பெய்ஜிங்)
உலகை அச்சுறுத்திய சார்ஸ் நோயைத் தோற்றுவித்ததாகக் கூறப்படும் விலங்குகளையும், ஊர்வனவற்றையும் சமைத்து தனது ஹோட்டலில் விற்பனை செய்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சீன நாட்டின் சிசுவான் மாகாணத்தைச் சேர்ந்த இவர் இப்பகுதியிலுள்ள காட்டில் அரிதாகக் கிடைக்கும் விலங்குகளையும், ஊர்வனவற்றையும் சமைத்து தனது ஹோட்டல் வாடிக்கையாளர்களுக்கு விநியோகித்தது மட்டுமல்லாது காட்டுப் பல்லிகளைச் சமைப்பதற்காக பிடித்து வைத்திருந்தாரெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்டுள்ள இவருக்கு கடுமையான தண்டனை வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (பி-2)

## மறைந்த விண்வெளி வீரர்களின் பெயர்கள் கிரகங்களுக்குச் சூட்டப்படும்

(நியூயோர்க்)
சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி நிலையத்திலிருந்து பூமிக்கு திரும்பிக்கொண்டிருந்த சமயம் விண்ணில் வெடித்துச் சிதறிய கொலம்பிய விண்வெளி ஓடத்தில் பயணம் செய்த இந்தியப் பெண் மணி கல்பனா சாவ்லா உட்பட 7 பேரினதும் பெயர்களை இதுவரை பெயரிடப்படாத கிரகங்களுக்கு சூட்டப்படவுள்ளது. இதன்மூலம் இவர்களது நினைவுச் சின்னங்கள் விண்ணில் கிரகங்களாக நிரந்தரமாகச் சுற்றி வருமென ஜெட்புரோபல் சிங் ஆய்வுகம் தெரிவிக்கின்றது. (பி-2)

# மர்ம நபர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு சகோதரர்கள் ஐவர் பலியாகினர்

## பாகிஸ்தானில் சம்பவம்

(இஸ்லாமபாத்)
பாகிஸ்தானில் கராச்சி நகரில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் 5 சகோதரர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

தனியார் மருத்துவமனையொன்றை நடாத்திவந்த இந்த சகோதரர்கள் நள்ளிரவு வேளையில் பணிமுடித்து வாகனத்தில் வீடு திரும்பிக் கொண்டிருந்த போது மோட்டார் சைக்கிளில் வந்த கொலையாளிகள் இவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளதாக பாகிஸ்தான் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் ஒரு தீவிரவாத தாக்குதலா என்பது குறித்து இதுவரையில் உறுதியாக எந்தத் தகவல்களும் கிடைக்கவில்லை என்று தெரிவித்துள்ள பொலிஸார் கொலைசெய்யப்பட்ட ஐவரும் எந்தவொரு மத ஸ்தாபனத்தையோ அல்லது அரசியல் கட்சியையோ சார்ந்தவர்கள் அல்ல என்றும் கூறியுள்ளனர். (பி-9)

## ஆப்கான் அரசு பலமிழக்கிறதாம் அங்குள்ள பெண்கள் ஆர்ப்பாட்டம்

(காபூல்)
ஆப்கானிஸ்தானின் பாதுகாப்பு பலமிழந்து வருவதுடன், மத்திய அரசு நாளுக்கு நாள் பலவீனமடைந்து வருவதாகவும் குற்றஞ் சாட்டி அந்நாட்டிலுள்ள பெண்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

அங்குள்ள பூங்கா ஒன்றில் கூடிய பெண்கள் இக்குற்றச்சாட்டுக்களை முன்வைத்து ஆர்ப்பாட்டம் நடத்தியதுடன் சர்வதேச படைகளின் உதவியையும் கோரியுள்ளனர்.

தலிபான்களின் ஆட்சியில் ஆப்கானிஸ்தான் பெண்கள் மீது பல கடுமையான சமூக சட்டங்கள் நடைமுறையில் இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (பி-2)

## லெபனானின் எறிகணைத் தாக்குதலுக்கு இஸ்ரேல் விமானத் தாக்குதல்

(பெய்ரூட்)
தெற்கு லெபனான் கிராமமொன்றின் மீது இஸ்ரேல் விமானம் குண்டுத் தாக்குதல் ஒன்றை நடத்தியுள்ளது.

இஸ்ரேலியர் ஒருவரைப் பலி கொண்ட லெபனானின் எறிகணைத் தாக்குதலுக்கு பதிலடியாகவே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக இஸ்ரேலிய இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

லெபனானின் ஹிஸ்புல்லா கெரில்லாக் குழுவினரால் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட எறிகணைத் தாக்குதல்கள் குறித்து ஐக்கிய நாடுகள் சபையிடம் முறையிட்டிருந்த இஸ்ரேல், இவ்வாறான தாக்குதல்கள் தடுத்து நிறுத்தப்படாவிட்டால் பதிலடி கொடுக்கப்படும் என்றும் தெரிவித்திருந்தது.

இதனையடுத்தே இஸ்ரேல் இந்த விமானத் தாக்குதலை நடத்தியுள்ளது. இரு நாடுகளுக்குமிடையே பரஸ்பரம் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதல்களினால் அப்பகுதியில் பதற்ற நிலைமை தோன்றியுள்ளது. (பி-9)

## 3ஆம் கட்ட பேச்சுக்களை ஆரம்பிக்க நேபாள மாவோ வாதிகள் ஆயத்தம்

(காத்மண்டு)
நேபாளத்தில் மாவோ போராளிகள் குழு அந்நாட்டில் 7 வருடங்களாக நீடித்துவரும் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக அரசாங்கத்துடன் 3வது சுற்றுப் பேச்சுக்களை ஆரம்பிக்கவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

மாவோ போராளிகளின் தலைமைப் பேச்சாளரான பாபுராபஜாராஜி பத்திரிகையில் அறிக்கையொன்றின் மூலம் இதனைத் தெரிவித்துள்ளார்.

இவ்வாண்டு ஏப்பிரல் மற்றும் மே மாதங்களில் இரண்டு தரப்பும் முதல் இரு சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்த போதிலும், பின்னர் அரசாங்கத் துருப்புக்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக போராளிகள் முன்வைத்த நிபந்தனைகளை அடுத்து பேச்சுவார்த்தைகள் இடைநிறுத்தப்பட்டன.

நேபாள இராணுவத்திற்கும் போராளிகளுக்குமிடையில் கடந்த ஜனவரி மாதம் முதல் போர் நிறுத்தம் ஒன்று கடைப்பிடிக்கப்பட்டு வருகின்ற போதிலும். தற்போது ஆரம்பிக்கப்படுகின்ற 3வது சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் போது இடைக்கால அரசாங்கம் தொடர்பாகவும், புதிய அரசியல் அமைப்பு வரைபு தொடர்பாகவும் முக்கியமாக ஆராயப்படவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (பி-9)

### உலக தரிசனம்

## நேபாள குர்க்கா ஈராக்கில் கொல்லப்பட்டார்

(பக்தாத்)
ஈராக்கின் பஸ்ரா நகருக்கு அருகே நிகழ்ந்த தாக்குதல் சம்பவமொன்றில் நேபாளக் குர்க்கா பாதுகாவல்படை அதிகாரியொருவர் கொல்லப்பட்டுள்ளார்.

ஐ.நா.விற்கு தபால்களை விநியோகம் செய்யும் வாகனத்தில் இவர் சென்றுகொண்டிருந்த சமயம், பக்தாத்தில் பிரிட்டிஷ் துருப்புக்களுக்கும் அங்குள்ள மக்களுக்குமிடையில் மோதல்கள் நடைபெற்றதாகவும் இதன்போதே இக்குர்க்கா துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

இவருடன் ஈராக்கியர் ஒருவர் கொல்லப்பட்டும் 8 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (பி-2)

## சூடானுக்கான சமாதானத் திட்டத்தை அந்நாட்டு அதிபர் எதிர்க்கிறார்

(கார்டூம்)
சூடானில் இடம்பெற்றுவரும் 20 வருட கால போருக்குத் தீர்வு காணும் முயற்சிகளுக்கான திட்டத்திற்கு, அந்நாட்டின் ஜனாதிபதி ஒமர் அல்பஸீர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

போருக்குத் தீர்வுகாணும் வகையில் கிழக்கு ஆபிரிக்க நாடுகளின் அதிகாரசபை தயாரித்திருக்கும் சமாதானத் திட்ட நகலுக்கே இவர் தனது எதிர்ப்பினை வெளியிட்டிருக்கின்றார்.

எனினும் சூடான் அரசிற்கும், சூடான் மக்கள் விடுதலைப் படையினருக்குமிடையிலான பேச்சுக்கள் திட்டமிட்டபடி கென்யாவிலுள்ள நாரு என்னும் நகரில் நடைபெற்றுள்ளது.

சமாதான நகல் வரைபு நாட்டைத் துண்டாடிவிடும் எனக் கூறும்அந்நாட்டின் ஜனாதிபதி. நியாயமானதும், அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதுமான தீர்வை ஏற்கத்தாம் தயாராக இருப்பதாகக்கூறியுள்ளார்.

சூடானின் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் வட பகுதிக்குள் கிறிஸ்தவர்கள் அதிகமாகவுள்ள தென்பகுதிக்கும் இடையிலான கடந்த 20 வருட காலப் போரில் 1.5 மில்லியன் மக்கள் மரணமடைந்திருப்பதுடன் 4 மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

# பத்திரிகை நிருபருக்கான டிப்ளோமா கற்கை நெறி

(கொழும்பு)

ஹிந்தியில் பத்திரிகை நிருபர்களுக்கான கற்கை நெறி ஒன்று, புதுடில்லியிலுள்ள ஹிந்தி மத்திய பணியகத்தினால் நடாத்தப்படவிருப்பதையொட்டி விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஹிந்தி பேசாத இந்தியர்கள், வெளிநாட்டவர்கள் வெளிநாட்டில் வதியும் இந்தியர்கள், வெளிநாட்டில் குடியேறியுள்ள இந்தியர்கள் போன்ற பிரிவினர் இதற்கு விண்ணப்பம் செய்யலாம்.

ஹிந்திமொழியில் பத்திரிகை நிருபர்களுக்கான சான்றிதழ், டிப்ளோமா கற்கை நெறிகளை இவர்கள் ஆங்கிலம்,தமிழ், மலையாளம், வங்காள போன்ற மொழிகள்மூலம் பயில முடியும். 2003 -2004 ஆம் ஆண்டுக்கான கற்கை நொறியானது சான்றிதழ் கற்கை நெறி அடிப்படையாகவும் டிப்ளோமா நெறி அடுத்த உயர் மட்ட கற்கை நெறியாகவும் வழங்கப்படவுள்ளது.

இந்தியாவில் அல்லது வெளிநாட்டில் வதியும் இந்தியர்கள், வெளிநாட்டவர்கள் விடயத்தில் குறைந்த பட்ச வயது 15 வருடமாகும்.

வெளிநாட்டில் வதியும் இந்தியர்கள் அல்லது குடியேறிகளின் குழந்தைகள் விடயத்தில் குறைந்த வயது 10 ஆகவும் இருக்கலாம். ஒவ்வொரு கற்கை நெறிக்கும் 50 அமெரிக்க டொலர்க்கு சமமான தொகை இலங்கை ரூபாவில் செலுத்தப்பட வேண்டும்.

விருப்பமுள்ளவர்கள் விண்ணப்பப்படிவங்களுக்கும் மேலதிக விபரங்களுக்கும் கொழும்பு-04 பௌத்த லோக மாவத்தையிலுள்ள இந்திய கலாசார மையத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம். 446892 என்ற தொலைபேசி இலக்கமூடாகவும் தொடர்பு கொள்ளலாம்.(பி)

## யாழ்ப்பாணமே விழித்துக்கொள்!




## விபத்தில் இருவர் காயம்

(கந்தரோடை)

சுன்னாகம் அந்தோனியார் கோயில் முன் வீதியில் கடந்த சனியன்று எட்டு மணியளவில் ஏற்பட்ட விபத்து ஒன்றில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

கந்தரோடையில் இருந்து வந்த மோட்டார் சைக்கிள் பாரஊர்தி ஒன்றினை கடந்த செல்ல முற்படுகையிலேயே இவ் விபத்து இடம் பெற்றுள்ளது.

இதன்போது,மேட்டார் சைக்களும் பலத்த சேதங்களுக்குள்ளாகியது. இது தொடர்பாக சுன்னாகம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (பி-103)

## நொச்சிக்குளம் புனரமைப்புப் பணி பூர்த்தி

(கந்தரோடை)

மல்லாகம் நொச்சிக்குளம் புனரமைப்புப் பணிகள்யாவும் பூர்த்தியடைந்துள்ளன. உலக உணவுத்திட்டமான நியாப்பின் நிதியுதவியுடன் இக்குளம் புனரமைக்கப்பட்டுள்ளது.

இக்குளத்தின் புனரமைப்புப் பணிகளில் கமத்தொழில் திணைக்களத் தொழில்நுட்ப உத்தியோகத்தர் க.ஆனந்தராசா, மல்லாகம் வ்வசாய சம்மேளனத் தலைவர் சு.பத்மநாதன் மற்றும் சம்மேளனத்தின் உறுப்பினர்களும், பத்திற்கு மேற்பட்ட விவசாயிகளும் ஒரு மாதகாலத்திற்கும் மேலாக புனரமைகப்புப் பணிகளில் ஈடுபட்டுவந்தமை குறிப்பிடத்தக்கது. (பி-103)

# கூட்டமைப்பின் தயவை நாடும் சந்திரிகா ஜே.வி.பி.யை உதாசீனம் செய்தாரா?

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, ஜே.வி.பி, ஸ்ரீ.சு.க. இடை



யிலான கூட்டுக் குறித்து கலந்துரையாட முனைந்த ஜே.வி.பி யின் உயர்மட்டக் குழுவொன்றைச் சந்திக்க மறுத்துவிட்டதாகக் கூறப்படுகின்றது.

கடந்த புதனன்று ஜே.வி.பி யின் செயலாளர் ரில்வின் சில்வா, விமல் வீரவன்ச, அனுராதிஸ நாயக்க ஆகியோரே ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச முனைந்த போது அதற்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதியைச் சந்தித்து உரையாடிய ஜே.வி.பி தூதுக் குழுவினர் அடுத்த கூட்டம் புதன்கிழமை நடைபெறுமென முடிவு செய்திருந்தனர். ஆனால் ஜே.வி.பியினர் புதன்கிழமை சென்றபோது சந்திப்பு மறுக்கப்பட்டது. ஜனாதிபதியின் மேலதிகச் செயலாளர் டபிள்யு.பீ. கணேகல சந்திக்க வந்திருப்பவர்கள் பற்றி ஜனாதிபதிக்கு தெரிவித்த போது, அவர் தனக்கு அமைச்சரவைக் கூட்டம் இருப்பதாகக் கூறிவிட்டார்.

இவ் விடயம் தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் பேச்சுக்களில் ஈடுபடுபவர்கள் எதுவும் கூறவில்லை என்பதுடன், சரத் அமுனுகம கடந்த ஞாயிறன்று நடைபெற்ற பேச்சுக்களில் கலந்திருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஜனாதிபதி குமாரதுங்க தமிழர் கூட்டமைப்பு எம்.பிக்களுடன் பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தியிருப்பதா கவும், அவர்களில் சிலர் ஜே.வி.பி யுடனான தொடர்புகளை நிறுத்திக் கொண்டால் தம்மால் ஆதரவு வழங்க முடியுமென தெரிவித்துள்ளதாகவும் அறியப்படுகின்றது.

மேலும், கடந்த செவ்வாயன்று மாத்தளையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய அனுரா பண்டாரநாயக்க. ஸ்ரீ.சு.க., ஜே.வி.பிக்குமிடையில் கூட்டணி அமைவது நிச்சயம் எனத் தெரிவித்திருந்தார். (உ)

# பற்றிக்ஸ் கல்லூரியின் தேவைகள் குறித்து உள்துறை அமைச்சருக்கு விளக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள மிகவும் பழமைவாய்ந்ததும் வடக்கு-கிழக்கு மாகாணத்தின் ஒரேயொரு கத்தோலிக்க கல்லூரியுமான சென். பற்றிக்ஸ் கல்லூரியை தேசிய பாடசாலையாகத் தரம் உயர்த்தித்தரும்படி நாம் பலதடவைகள் கலவித்திணைக்களத்தையும் அரசையும் கோரிவந்துள்ள போதிலும் கூட. இதுவரை எந்தவிதமான ஆக்க பூர்வமான நடவடிக்கையும் எடுக்கப்படாமை எமக்குப்பெரும் கவலையையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது.

என யாழ். மறை மாவட்ட கத்தோலிக்க ஆயர் கலாநிதி தோமஸ சௌந்தரநாயகம் நேற்று முன்தினம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியில உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க பங்குகொண்டிருந்த கூட்டத்தில் உரையாற்றும்போது தெரிவித்துள்ளார்.

கல்லூரி அதிபர் வண.பிதா கலாநிதி ஜஸ்ரின் பேர்னாட் ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் ஆயர் தொடர்ந்து குறிப்பிடுகையில்;

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும எமது கல்லூரியின் தேவைகள் அதிகம்.இங்குள்ள பாடசாலைகளில் கத்தோலிக்க சமய பாடத்தினைப் படிப்பிப்பதற்கு போதிய ஆசிரியர்கள் இல்லாமல் இருப்பது பெரும் பின்னடைவாகவுள்ளது. எனவே அரசாங்கம் புதிய ஆசிரியர்களை நியமிக்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும் யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் திருக்குடும்ப கன்னியர் மடம் மகாவித்தியாலயத்தையும் தரஉயர்த்துவதற்கு கிறிஸ்தவ அமைசசர் உதவியையைச் செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். (உ-16)

# சீன அரசோடு ஒத்துப்போக எந்தச் சந்தர்ப்பத்திலும் தயார்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

சீனாவின் நடவடிக்கைகளை இலங்கை அரசு ஒரு போதும் புறந்தள்ள மாட்டாது என பிரத



மர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சீனா சென்றுள்ள பிரதமர் அங்குள்ள முகவர் நிலையம் ஒன்றிற்கு அளித்த விசேட செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது பற்றி அங்கு அவர் மேலும் கூறுகையில்;

சீனாவுடன் அரசியல் விடயங்கள் குறித்தும்.பொதுவான விடயங்கள் குறித்தும் ஆராயப்படும்.

1950 ஆண்டில் சீனா-இலங்கை ஆகிய இரு நாடுகளிற்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் ஆரம்பிக்கப்பட்டன.

பல்வேறு நெருக்கடியான காலகட்டங்களிலும் இலங்கையுடன் சீனா நல்லெண்ணத்துடன் நடந்துள்ளது.

இதனை நாம் பெரிதும் வரவேறபதுடன், தொடர்ந்தும் இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான நல்லுறவுகள் வளர வேண்டும் என்றார்.

இதேவேளை,பிரதமர் ரணில் விக்கிரசிங்கவும் அவருடன் சென்ற வர்த்தக முதலீட்டுத் தூதுக் குழுவினரும் சீனாவில் உள்ள தொழிலநுட்பக் கம்பனிகளை பார்வையிட்டு வருவதுடன், சீனாவில் உள்ள வர்த்தகர்களுடனும் கலந்துரையாடி வருகின்றனர்.

மேலும்,சீனப் பிரதமர் பெய்ஜீவா பாவோவையும்.சீன ஜனாதிபதி குஜிந்தா மற்றும் அந்நாட்டு தேசிய காங்கிரஸ் தலைவர் ஆகியோரையும் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கா பீக்கிங்கில் வைத்து நேற்றுச் சந்தித்துள்ளார். (உ-10)

# திருட்டு முயற்சியில் ஈடுபட்ட மாணவர்கள் மடக்கிப் பிடிப்பு

(சுண்டுக்குளி)

கடந்த சனியன்று நள்ளிரவில் ஈச்சமோட்டைப்பகுதியில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனம் ஒன்றின் வாயில் கதவைக் கழற்ற முற்பட்ட சிலர் அப்பகுதிப் பொதுமக்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டனர்.

இவர்கள் திருநகர் ஈச்சமோட்டை, கொய்யாத்தோட்டம் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் நலன்புரிச் சங்கம் ஒன்றின் தொண்டர்கள் என்பதும் பின்னர் தெரியவந்துள்ளது.

அத்துடன்,இவர்கள் பாடசாலை மாணவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை.கடந்த சில காலங்களாக சுண்டுக்குளிப் பகுதியில் திருடர் தொல்லை அதிகரித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-110)

# சமஷ்டித் தீர்வுக்கு சிங்கள மக்கள் எதிர்ப்பு

(கொழும்பு)

சமஷ்டி அடிப்படையில் இனப் பரச்சினைக்குத் தீர்வுகாணும் யோசனைக்கு சிங்கள மக்களில் பலர் எதிர்ப்புத் தெரிவித்துவருகின்றனர்.

அரச சார்பற்ற நிறுவனமான சோசல் இன்டிக்கேற்றட் என்ற அமைப்பு நாட்டிலுள்ள 17 மாவட்டங்களில் மேற்கொண்ட அபிப்பிராய வாக்கெடுப்பின் மூலம் இது தெரியவந்துள்ளது.

தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களும் மலையகத் தமிழ் மக்களும் சமஷ்டிக்கு ஆதாரவாகவே வாக்களித்துள்ளனர்.

இதன்படி 21.9 சதவீத சிங்கள மக்களும், 86.5 சதவீத தமிழர்களும்,60.4 சதவீத முஸ்லிம் மக்களும்,79.சதவீத மலையக மக்களும் சமஷ்டித் தீர்விற்கு ஆதாரவாக வாக்களித்துள்ளதாக அவ் அமைப்புத் தெரிவித்துள்ளது.(உ-10)

# பெரகர நிகழ்வில் நடனமாடிய இருவர் மீது அங்குசத் தாக்குதல்

(கண்டி)

கண்டி தலதா மாளிகையில் இடம்பெற்ற பெரகர நிகழ்வில் நடனமாடிய இருவர் உலாவந்த யானைப்பாகனின் அங்குசத்தால் குத்தப்பட்டு படுகாயமடைந்த நிலையில் கண்டி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஜே.வி.தென்னக்கோன் (வயது 40), டபிள்யு.பி. தென்னக்கோன் (வயது35)ஆகிய இருவருமே யாணைபாகனின் அங்குசத் தாக்குதலுக்கு இலக்கானவர்களாவர் .

யானை உலாவருவதற்குத் தடையாக நடனமாடிய இவ்விருவரையும் அப்புறப்படுத்த முயன்ற போதே, தவறுதலாக அவர்கள் காயமுற்றுள்ளதாக சம்பந்தப்பட்ட யானைப்பாகன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை,தனிப்பட்ட விரோதம் காரணமாக இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

இது குறித்து கண்டிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (உ)

# எனது யாழ். விஜயத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்குமாறு மக்களைத் தூண்டி விட்டவர் அமைச்சர் ஜயலத்

## ஜோன் அமரதுங்க இப்படிக் குற்றச்சாட்டு

## இருவருக்கும் இடையிலான முரண்பாடு முற்றுகிறது

(கொழும்பு)

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் தனக்கு ஏற்பட்ட அவமதிப்புக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தன புரிந்த சூழ்ச்சியே காரணம் என உள்துறை அமைச்சரும் கிறிஸ்தவ விவகார அமைச்சருமான ஜோன் அமரதுங்க குற்றம் சாட்டியிருப்பதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் விஜயம் செய்த உள்துறை அமைச்சர் மற்றும் உயர் மட்டக் குழுவினர். யாழ். செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட கலந்துரையாடலில் பங்கேற்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து செயலக வாயிலில் மக்கள் மறியல் போரில் ஈடுபட்டிருந்ததும், இதன்காரணமாக அமைச்சரின் செயலகக் கலந்துரையாடல் இறுதி நேரத்தில் இரத்துச் செய்யப்பட்டிருந்ததும் தெரிந்ததே.

இது குறித்து கொழும்பில் வைத்து மேலும் கருத்து வெளியிட்டுள்ள ஜோன் அமரதுங்க,

எனக்கு முதல் யாழ்ப்பாணம் விஜயம் செய்து, அவர் மேல் விரக்தியுற்ற மக்களால் விரட்டியடிக்கப்பட்ட ஒருவரே எனது வருகைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நடவடிக்கைகளின் பின்னணியில் செயற்பட்டுள்ளார்.

எனது விஜயத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரத்திற்கும் இந்த அமைச்சருக்கும் நிறையத் தொடர்புண்டு.

மக்களைப் பேய்க்காட்டிப் பிழைப்பவர்கள் என்மீதும் சேறு பு,ச முயன்றுள்ளனர் என்றுள்ளார்.

இதேவேளை, ஜோன் அமரதுங்கவின் குற்றச்சாட்டுக் குறித்துப் பதிலளித்துள்ள அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தன,

எனக்கு யாழ்ப்பாணத்தில் நடந்த கதி குறித்து நான் அரசிடம் முறையிட்டபோது எள்ளி நகையாடி எனது தனிப்பட்ட செயற்பாடுகளே இதற்குக் காரணம் என்று விமர்சித்தவர்களுக்கு இன்று அதே கதி ஏற்பட்டுள்ளது.

எனக்கு நடந்த கதியை நான் எக்காரணம் கொண்டும் மறைக்கவில்லை. உண்மை நிலையை ஊடகங்கள் ஊடாக வெளிப்படுத்தியிருந்தேன்.

இவரது யாழ். விஜயத்திற்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தமைக்கும் எனக்கும் தொடர்புண்டு என்று நிரூபித்தால் உடனடியாகவே எனது அமைச்சுப் பதவியைத் துறப்பேன் என்று சவால் விட்டிருக்கிறார். (உ)

## உரிமைகளைக் கேட்பதற்கு முறையுண்டு மனிதத் தன்மையை இழக்காதீர!

### உள்துறை அமைச்சருக்கு எதிரான மறியல் போரில் ரவிராஜ் எம்.பி.

(யாழ்ப்பாணம்)

உரிமைகளைக் கேட்கும் போது அதற்குரிய முறையிலே கேட்கப்படல் வேண்டும் என யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் மக்கள் மத்தியில் வலியுறுத்தியுள்ளார்.

நேற்றைய தினம் யாழ். விஜயம் செய்த உள்துறை அமைச்சரும் கிறிஸ்தவ விவகார அமைச்சருமான ஜோன் அமரதுங்க யாழ். செயலகத்துள் நுழைய விடாது காணாமல் போனோர் சங்கப்பிரதிநிதிகள் மற்றும் வலி. வடக்கு இடம்பெயர்ந்தோர் சங்கப் பிரதிநிதிகள், பொதுமக்கள் என பலர் இணைந்து மேற்கொண்ட மறியற் போரைத் தணிக்க முற்பட்ட வேளை ரவிராஜ் எம்.பி. இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் தெரிவிக்கையில்,

எம்மைத் தேடி வந்தவர்களை நாம் மனப்பூர்வமாக வரவேற்று அவர்களிடம் எம் குறைகளை தெளிவுபடுத்தல் அவசியம்.

ஆனால் எதற்கு எடுத்தாலும் மறியல் போராட்டம், எதிர்ப்புப் பேரணிகள் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதில் எந்தப் பலனும் கிடைக்கப்போவதில்லை. மாறாக முரண்பாடான சூழ்நிலை தோன்றி எமக்குக் கிடைக்கவிருக்கும் சில வாய்ப்புக்களையும் இழந்து போகக்கூடிய சூழ்நிலை ஏற்படும். இவை சிலவேளைகளில் சமாதான முயற்சிகளுக்கு குந்தகமாகக் கூட அமைந்துவிடலாம்.

உங்களது கோரிக்கைகளில் நியாயம் இருந்தாலும் அதை மனிதத் தன்மையுடன் பொருத்தமான இடங்களில் கேட்டுப் பெற்றுக்கொள்ளுதல் அவசியம் என்றார்.

மேலும், அமைச்சர் ஜோன் அமரதுங்கவை சந்தித்து சமகால அரசியல் நிலைமைகள் பற்றி ஆராய்வதற்காக செயலகத்திற்கு நான் வந்தபோதும் அவரைச் சந்திக்க முடியாது போனதையிட்டு மனம் வருந்துவதாகவும் அவர் தெரிவித்தார். (உ-4)

## பொலிஸ் அதிகாரிகளுக்கு ஏற்பட்டுள்ள அரசியல்வாதிகளின் அச்சுறுத்தல் குறித்து

### பிரதமருக்கு மகிந்த ராஜபக்ஷ கடிதம்

(கொழும்பு)

பொலிஸ் அதிகாரிகளுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் அரசியல்வாதிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ பிரதமரைக் கேட்டுள்ளார்.

இது தொடர்பான கடிதமொன்றையும் மகிந்த ராஜபக்ஷ பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு அனுப்பியுள்ளார்.

கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாவது,

நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவரும் பொலிஸ் அதிகாரிகளை ஆளும் கட்சியின் அரசியல்வாதிகள் சிலர் தொடர்ந்து அச்சுறுத்தி வருகின்றனர்.

இதனால் பொலிஸார் தமது பணிகளை ஒழுங்காகச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாகவே நாட்டில் கொலை, கொள்ளை போன்ற சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

எனவே, நாட்டில் சட்டத்தையும், ஒழுங்கையும் முறையாகப் பேண வேண்டுமானால் பொலிஸாரின் பணிகளுக்கு அரசியல்வாதிகள் தடையாக இருக்கக் கூடாது என்றார்.

இதேவேளை, கடந்த வாரம் ஐ.தே.க. அமைச்சரின் மருமகன் ஒருவர் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவருக்கு கன்னத்தில் அறைந்து காயம் ஏற்படுத்தியமை தெரிந்ததே. (உ-10)

## வெளிநாடுகளுடன் வேலை வாய்ப்பு ஒப்பந்தங்கள்

(கொழும்பு)

இலங்கையர்களுக்கு அதிக வேலைவாய்ப்பை வழங்கும் நாடுகளுடனான புரிந்துணர்வு உடன்பாடுகளை இலங்கை அரசு இவ்வாண்டு மேற்கொள்ளவுள்ளதாகவும் முதலில் இத்தகைய உடன்பாடு மலேசியாவுடன் செய்து கொள்ளப்படவிருப்பதாகவும் தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்,

மலேசியாவிற்கும்-இலங்கைக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று இம்மாதம் 29ஆம் திகதி மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மலேசியாவினையடுத்து ஜோர்தானுடன் இலங்கை அரசு இத்தகையதோர் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றைச் செய்யவுள்ளது.

இத்தகைய உடன்பாடுகள் வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கைத் தொழிலாளர்களுக்கு பயன்தரும் ஒன்றாக அமையும்.

தற்போது வெளிநாடுகளில் பணியாற்றுவோரில் பெண்களின் எண்ணிக்கையே அதிகமாக இருக்கின்றமையால் அவர்களது சமூக நலன் உதவிகளையும் பாதுகாப்பையும் உறுதி செய்யும் என்றார். (உ-10)

## சாவகச்சேரிப் பகுதிக்கு விரைவில் மின் விநியோகம்

(கொழும்புத்துறை)

சாவகச்சேரிப் பகுதிக்கான மின்சார விநியோகம் விரைவில் சாத்தியமாகும் என மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்துள் ளன.

மேற்படி பகுதிக்கு மின் விநியோகம் செய்வதற்கு ஏதுவாக அரியாலையில் இருந்து சாவகச்சேரி வரை மின் கம்பங்களை நாட்டுவதற்கு அப் பகுதியில் புதைக்கப்பட்டிருந்த மிதிவெடிகள் தடையாகவிருந்தன.

இதனையடுத்து சம்பந்தப்பட்ட பகுதிகளில் ஹலோட்ரெஸ்ற் கண்ணிவெடியகற்றும் பிரிவினர் துரித கதியில் கண்ணிவெடிகளை அகற்றி வருகின்றனர்.

இப்பணி தற்போது முடிவுறும் தறுவாயில் உள்ளது குறிப்பிடத்தக்கது. (உ--51)

## க.பொ.த. (உ/த) பரீட்சை முன்னணிப் பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த. (உ/த) பரீட்சைப் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகியுள்ளன. முன்னணிப் பெறுபேறுகளைப் பெற்ற யாழ். குடாநாட்டு மாணவர்களின் பெயர்கள் பாடசாலை ரீதியாக தரப்படுகின்றன.

**யாழ். மத்திய கல்லூரி**

***விஞ்ஞானப்பிரிவு***

க.வெங்கடேசன் - ஏ,பி,சி
ந.காந்தீபன் - 3பி
அ.பவித்திரன் - பி, 2சி

***கணிதப்பிரிவு***

தி.ஜெயந்தன் - ஏ, 2சி
ப.தினேஸ்குமார் - 2பி, சி
ஆ.ரகுரட்ணம் - 2பி, எஸ்
ம.நிமலன் - பி, சி, எஸ்
க.சாரங்கன் - 3 சி

***வர்த்தகப் பிரிவு***

க.தர்மித் - 2ஏ, பி
பி.பிரதீப் - 2ஏ, பி
க.அருட்குகன் - ஏ, 2பி
சே.ஜெகிந்தன் - ஏ, 2பி
ந.குணபாலன் - 3பி
வே.சதீஸ் - 3பி
செ.மதனரூபன் - ஏ,பி,சி
பே.பேரின்பநாதன் - 2பி, சி
சு.மனோதீபன் - ஏ, 2சி

***கலைப்பிரிவு***

அ.நிசாந்தன் - ஏ, 2பி
க.சிவனேசன் - ஏ,பி,சி
ஸ்.பெர்னாண்டோ - ஏ,பி,சி
க.சந்திரதாசன் - ஏ,பி,சி
கா.மயூரன்- 3பி
க.நவதர்சன் - 2ஏ,சி
தி.விக்னேஸ்வரன் - ஏ,பி,எஸ்

**கொக்குவில் இந்துக் கல்லூரி**

***வர்த்தகப் பிரிவு***

ந.கஜேந்திரா - 3ஏ
சி.பிரதீபன் - 3ஏ
சு.ரஜீபன் - 3ஏ
சி.சஜீதா - 3ஏ
இ.ரதீபா - 2ஏ, பி
ம.ரேகாளினி - 2ஏ,பி

***கணிதப்பிரிவு***

பா.மோகன்ராஜ் - 3ஏ
சி.அம்பிகா - 2ஏ, பி
ஆ.ஜெயரூபன் - 2ஏ,சி

***கலைப்பிரிவு***

த.அஜந்தா - ஏ,2பி

**யாழ். இந்துக் கல்லூரி**

***கணிதப்பிரிவு***

செ.ஜங்கரன் - 3ஏ
ப.இராஜராஜன் - 3ஏ
சி.சதீசன் - 3ஏ
சி.சசிஜந்தன் - 3ஏ
யோ.சிவானுஜன் - 3ஏ
கோ.சுதர்சன் - 3ஏ
க.றிஷிகேசன் - 3ஏ
அ.கரணிதரன் - 2ஏ,பி
நா.இளஞ்செழியன் - 2ஏ, பி
கு.சுகந்தமாறன் - 2ஏ, சி
கு.சஞ்சீவன் - 2ஏ, சி

***விஞ்ஞானப்பிரிவு***

வே.சுதர்சன் - 3ஏ
எ.கிஷோ - 3ஏ
து.ரஜீவன் - 3ஏ
மு.வாகீஸ்வரன் - 3ஏ
செ.தேவசீலன் - 2ஏ, பி
ச.மணிவண்ணன் - 2ஏ, பி
வி.விபுலன்- 2ஏ, பி
வெ.செந்தூரன் - 2ஏ, சி

***வர்த்தகப்பிரிவு***

கு.கஜனான் - 3ஏ
ச.பிரகாஸ் - 3ஏ

**யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை**

***விஞ்ஞானப்பிரிவு***

பி.ஜனோஜினி - 3ஏ
இ.ஜசித்தா - 3ஏ
க.மகிழனி - 3ஏ
கு.வேணி - 2ஏ, பி
ம.கரிஷாந்தி - 2ஏ, பி
ம.கௌசிகா - 2ஏ, பி
பு.சர்மிளா - 2ஏ, பி
ச.சுகர்திகா - 2ஏ, பி

***கணிதப்பிரிவு***

பா.டிசானி - 2ஏ, பி

***வர்த்தகப்பிரிவு***

லோ.சாயிசுதா - 3ஏ
த.டிலக்ஷி - 3ஏ
தெ.யாழினி - 3ஏ
இ.கவிதா - 2ஏ, பி
கு.சிவகௌரி - 2ஏ, பி
ஏ.சிவதர்சினி - 2ஏ, பி
த.கீர்த்தலதா - 2ஏ, பி
த.நிரஞ்சினி - 2ஏ,பி
வை.ராகினி - 2ஏ,பி
த.சுகரூபா - 2ஏ.பி

**யாழ். இந்து மகளிர் கல்லூரி**

***வர்த்தகப்பிரிவு***

சி.தாட்சாயினி - 3ஏ
த.வரநிதி - 3ஏ
ர.நர்சுதா - 3ஏ
த.வத்சலா - 2ஏ, பி
சி.நளினி - 2ஏ,பி
செ.வசந்தகுமாரி - 2ஏ, பி

***கலைப்பிரிவு***

ச.தாட்சாயினி - 3ஏ
க.மதுராம்பிகை - 2ஏ, பி
சி.ஸ்ரீபிரபாயினி - 2ஏ, பி
சி.கார்த்திகா - 2ஏ,பி
செ.கௌசல்யா - 2ஏ, பி
த.கவிதா - 2ஏ, சி
ச.பாமினி- 2ஏ, சி
க.நர்மளா - 2ஏ, சி
கி.தர்சினி - ஏ,பி,சி
கை.தீபகலா - ஏ,பி,சி
சோ.காயத்திரி - ஏ,பி,சி
க.நிஷந்தினி - ஏ,பி,சி
சி.நளினி - ஏ,பி,சி

***விஞ்ஞானப்பிரிவு***

சி.காயத்திரி - 2ஏ, பி
பே.கயல்விழி - ஏ, 2பி
இ.துர்க்கா - ஏ, 2பி

**யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி**

***விஞ்ஞானப்பிரிவு***

ச.வினோதன் - 2ஏ, பி

***கணிதப்பிரிவு***

ம.ஜங்ஸரன் - 2ஏ, சி

***வர்த்தகப்பிரிவு***

யூட் லியோன் - ஏ, 2பி
ஏ.சுஜீவன் - ஏ. 2பி

(02ஆம் பக்கம் பார்க்க)

## வீரமுரசு வாரஅரங்கு

(யாழ்ப்பாணம்)

பிரதேச ரீதியாக இடம்பெற்று வருகின்ற வீரமுரசு வாரஅரங்கு நிகழ்வு இன்று அனலைதீவு ஐயனார் ஆலய முன்றலில் இடம்பெறவுள்ளது.

இதில் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செம்மணன், தேசிய எழுச்சிப் பேரவை இணைப்பாளர் கனகலிங்கம் ஆகியோர் சிறப்புரை ஆற்றவுள்ளனர். (உ)

# இன்று இலங்கைவரும் சொல்ஹெய்ம் நாளை தமிழ்ச்செல்வனைச் சந்திக்கிறார்

(கொழும்பு)

இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் தூவரும் சமாதானப் பிரதிநிதியுமான எரிக்சொல்ஹெய்ம் இன்று இலங்கை வரவுள்ளார். என நோர்வே தூதரகப் பேச்சாளர் தோமஸ் ஸ்ராங்கெலின் தெரிவித்துள்ளார்.



சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடர்வது குறித்தும் குரங்குப்பாஞ்சான் குளத்தில் உள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் முகாம்பற்றிய விவகாரம் குறித்தும் ஆராய்வதற்காக இன்று இலங்கைவரும் எரிக்சொல்ஹெய்ம நாளை புதன்கிழமை வன்னிசென்று தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இவா சுமார் இரு வாரங்களுக்கு இலங்கையில் தங்கியிருந்து இலங்கையரசு மற்றும் விடுதலைப் புலிகளுடன் சமாதான முயற்சிகளுடன் தொடர்புடைய பல்வேறு முக்கிய விடயங்கள் குறித்து தொடர்ச்சியாகப் பேச்சுவார்த்தை நடத்துவார்.

சமாதானப் பேச்சை மீள ஆரம்பித்தல், இடைக்கால நிர்வாகம் தொடர்பான யோசனைகள், யுத்தப் பிரதேச மக்களின் புனர்வாழ்வு நடவடிக்கைகள் குறித்தும் இவர் விரிவாக இருதரப்பினருடனும் கலந்துரையாடவுள்ளதாகவும் நோர்வே தூதரகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.



இதற்கிடையில், இன்று இலங்கை வரும் எரிக்சொல்ஹெய்மை, போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் சந்தித்துப் பேசவுள்ளதாகவும், முக்கியமாக குரங்குபாஞ்சான் குளத்தில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் முகாமினால் எழுந்துள்ள சர்ச்சை குறித்து எடுத்துக் கூறுவார்கள் என்றும் பெரும்பாலும் இவர்களின் சந்திப்பு இன்று நடைபெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

# காணி அமைச்சரின் யாழ். விஜயம் இறுதி நேரத்தில் இரத்து

(யாழ்ப்பாணம்)

காணி அமைச்சர் ராஜித சேனரட்ணவின் நேற்றைய யாழ். விஜயம் இறுதி நேரத்தில் இரத்துச் செய்யப்பட்டது.

யாழில் இடம் பெறவுள்ள வடக்கு-கிழக்கு சமாதான விளையாட்டு விழா மற்றும் தேசிய விளையாட்டு விழா பற்றிய ஏற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடல் ஒன்றுக்காக நேற்று மு.ப. 10 மணிக்கு அமைச்சர் ராஜித யாழ். செயலகத்திற்கு வருகை தரவிருப்பது குறித்து ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கிணங்க நேற்றைய தினம் யாழ். செயலகத்தில் அமைச்சரின் வருகைக்காக காத்திருந்த செயலக அதிகாரிகள் மற்றும் விளையாட்டுத்துறை அதிகாரிகள், பிரதேச செயலர்கள் ஆகியோர் காலதாமதமாக வந்த அமைச்சரின் விஜயம் இரத்தான அறிவிப்பை அடுத்து ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

தனிப்பட்ட காரணங்களுக்காகவே இவரது விஜயம் இரத்துச் செய்யப்பட்டதாகவும் எதிர்வரும் சனியன்று அமைச்சரின் யாழ். விஜயம் இடம்பெறும் என்றும் காணி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, நேற்று முன்தினம் யாழ். வந்த உள்துறை அமைச்சரின் செயலகக்கலந்துரையாடலுக்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து மறியல் போராட்டம் செய்தமை, மற்றும் கடந்த மாதம் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனவை யாழ். பல்கலைக் கழகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வுக்குச் செல்லவிடாது மாணவர்கள் மறியல் செய்தமை



ஆகிய சம்பவங்களை மனதில் கொண்டே காணி அமைச்சரும் தனது விஜயத்தை இடை நிறுத்தியிருக்கலாம் என குடாநாட்டவர்கள் பரவலாகப் பேசிக் கொண்டனர். (உ-10)

# புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு எதிரான மனு மீதான தீர்ப்பு செப்ரெம்பர் 15 இல்

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும்-தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான ஒப்பந்தம் ரத்துச் செய்யப்பட வேண்டும் என்ற வகையில் சமர்ப்பிக்கப்பட்ட மனு மீதான தீர்ப்பினை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி மேன் முறையீட்டு நீதிமன்றம் வழங்க விருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜே.வி.பி., சிஹல உறுமய ஆகிய இரு கட்சிகளும் இணைந்து அரசிற்கும் புலிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் நாட்டின் அரசியல் யாப்பின் நிலைப்பாடுகளுக்கு முரணான வகையில் அமைந்துள்ளது என்றும் எனவே இவ் ஒப்பந்தம் ரத்துச் செய்யப்பட வேண்டும் என்று கோரி கடந்த சில மாதங்களுக்கு முன்னர் மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுவொன்றைச் சமர்ப்பித்திருந்தன.

அதனையடுத்து மேற்படி மனுவை விசாரணைசெய்த மேன்முறையீட்டு நீதிமன்றம் சம்பந்தப்பட்ட வாதி மற்றும் பிரதிவாதிகளிற்கும் இது பற்றிய சகல விதமான ஆவணங்களையும் நீதிமன்றில் சமர்ப்பிக்க வேண்டும் என அறிவித்தல் விடுத்துள்ளது.

இம்மனுவில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவை அங்கத்தவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மேற்படி மனு மீதான தீர்ப்பினை வழங்கும் தினத்தன்று அதாவது செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி சட்டத்தரணிகளும் இது பற்றிய தத்தமது கருத்துக்களை முன்வைக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்குறித்த வழக்கு விசாரணைக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் வே.பிரபாகரன் நீதிமன்றிற்கு சமுகமளிக்க வேண்டும் என்ற வகையிலான உத்தரவு ஒன்று கொழும்பு தமிழ்ப் பத்திரிகையொன்றில் அண்மையில் பிரசுரமாகியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-10)

# ஐ.தே.மு.வின் ஆட்சி முடிவுக்கு வர ஸ்ரீ.சு.க - ஜே.வி.பி கூட்டு அவசியம்

## விமல் வீரவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கியதேசிய முன்னணி அரசின் ஆட்சியை முடிவிற்குக் கொண்டு வர வேண்டுமானால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும்-மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் கூட்டமைப்பொன்றை ஏற்படுத்த வேண்டும்.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

பொகாம்புவப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு பேசுகையிலேயே விமல் வீரவன்ச இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையிலான கூட்டமைப்பு ஏற்படாமைக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் உள்ள சில சிரேஷ்ட உறுப்பினர்களே காரணமாக இருக்கிறார்கள்.

இதேவேளை, கூட்டமைபொன்றை உருவாக்கும் எண்ணம் முதலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கே இருந்தது. நாம் கூட்டமைப்பை அமைக்க வேண்டுமென அவர்களை ஒரு போதும் வற்புறுத்தவில்லைஎனவும் தெரிவித்தார். (உ-10)

# நல்லூரான் திருவடிக்கு

## (இன்று மஞ்சத் திருவிழா)



### மயில் வீரா அருள்வாயே

மயில் வீரா அருள்வாயே
தஞ்சமென வருவோர்க்கு தாவுடனே அருள் புரிவாய்
வெஞ்சமரில் வெற்றி கொண்டு தேவர் குலம் காத்தாய்
மஞ்சமதில் பவனி வரும் நல்லூரின் வேலவனே
நெஞ்சமதில் நிம்மதியை எங்களுக்குத் தாராயோ

பஞ்சம் பசி பிணிகள் பற்றி எம்மைத் தொடராமல்
வஞ்சனைகள் செய்பவர்கள் வலையில் நாம் சிக்காமல்
அஞ்சுகின்ற மனப்பான்மை எம்மை விட்டே அகன்றிடவே
மஞ்சமதில் பவனிவரும் மயில் வீரா அருள்வாயே

சாதபதி நெல்லியடி

### மீட்டிடுவாய்

மாமணியே மலர்வதனா
வாழ்க்கையெனும் ஆழ்கடலில்
போகும்வழி புரியவில்லை
வந்து நீயும் மீட்டிடுவாய்
மஞ்சமதில் வருபவனே

என்.ஜனார்த்தனன்

### அள்ளித் தருவாய்

நஞ்சையுண்ட கண்டன் தனை
கொஞ்சி விளையாடியோனே!

அஞ்சி வந்து உன்னை நாடி
தஞ்சமென வந்துநிற்கும் - பக்தர்

கெஞ்சி வேண்டும் வரமதனை
மஞ்சமது ஏறிவரும்
கந்தா அள்ளித்தருவாய்

ஆர்.ஸ்வஸ்திக்கா

### காப்பாயே

நல்லையானே உன்னையே
தஞ்சமென நம்பியே
தொல்லைதீர்க்க ஓடிவந்தேன்
மஞ்சமேறிக் காப்பாயே

- என்.நெல்சன்

### உண்மைப்பொருள் நீயே...!

சிந்தையில் முருகன் நினைவை நிறுத்தி
சீர்பெறு நல்லைப் பதியடைய
சொந்தமும் சொத்தில் கொண்ட பற்றும்
சற்றும் இன்றி யொழிந்திட
எந்தன் மனதில் அமைதி பிறக்க
எங்கும் முருகன் எழிலே கண்டு
கந்தன் அவனே யுண்மை யென்ற
கருத்தைப் பெற்றுக் களித்தேனே

நா.நவராஜ்

# மூலிகைகளைப் பயன்படுத்துவதன் மூலம் முழுமையான சுகத்தைப் பெறுவோம்

இன்று நம் மண்ணில் அளவற்ற நோய்கள் மலிந்து விட்டன. இந் நோய்கள் உண்டாவதற்கான காரணங்கள் எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனாலும்,அந்நோய் தோன்றிய பின் அது எங்கிருந்து எப்படி பிறந்தது வளர்ந்தது என்று அதற்கான ஆராய்ச்சிகளைச் செய்து கொணடு இருப்பதைவிட உண்டான நோயை உடனடியாக வெல்ல வேண்டியது அவசியமல்லவா?

சித்தவைத்தியம் ஆயுள்வேத வைத்தியம் இவ்விரண்டுமே நீண்ட நெடும் காலமாக இமையம் தொடக்கம் இலங்கை வரையிலும் மக்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆகவே இவற்றைத் தேசிய வைத்தியங்களாகக் கருதலாம். நாட்டு வைத்தியம் என்பன எளிமையாக்கப்பட்ட நமது சித்தவைத்திய மேயாகும். நாம் அன்றாடம் உண்ணும் உணவில் இருந்து நாம் அறியாத மூலிகைகள் வரை நமது உடல்நலத்தின் பொருட்டு சித்த மாமுனிவர்களால் கண்டறியப்பட்ட ஒன்றாகும். சித்தர்கள் கூறிய சிறப்பான மருத்து வமுறைகளில் ஒன்று தான் "மூலிகை" வைத்தியம். நமது மண்ணில் காணபடும் மூலிகைகள் அனைத்துமே தாவர இனத்தைச் சார்ந்தவையாகும். தாவர இனத்தில் மரம், செடி, கொடி, புல். பூண்டு ஆகியன அடங்கும். சித்தர்கள் தாவர இனத்தைச் சேர்ந்த இலை ஒவ்வொன்றும் இவற்றின் வேர்ப்பட்டை, தண்டு, இலை, தழை, மலர்,காய்,கனி,விதை, பட்டை, புறணி, கொட்டை, பருப்பு ஆகிய உறுப்புகளும் நோய்நீக்கும் தன்மையுடையதே என்பதை அறிந்துள்ளார்கள். எனவே,அவற்றை தரம் பிரித்து இந்த தாவரத்தின் இந்த உறுப்பு இன்ன குணமுடையது. இந்த நோயை நீக்கும் என்பதை சித்தர்கள் கண்டறிந்து கூறியுள்ளார்கள்.

நமது மண்ணில் இன்று காணப்படுகின்ற சாதாரண மக்களும் அறிந்த எளிய மூலிகைகள் சிலவற்றின் பயன்களே கீழே தரப்படுகிறது.

## அறுகம் புல்

அறுகம் புல்லை நாம் அன்றாடம் சாதாரணமாக காணக்கூடியதான ஒரு புல்லினமாகும். இது ஒரு தெய்வீக மூலிகையுமாகும். இதை இந்துக்களாகி நாம் விநாயக வணக்கத் திற்காக உபயோகிக்கின்றோம். இவ் அறுகம்புல்லை நாம் அதிகம் காண்பதால்தான் ஏற்கனவே நம்மில் பலர் அதை அலட்சியப்படுத்தி விடுகின்றனர். ஆயினும், அலட்சியப்படுத்துவதற்கு உரிய ஒரு மூலிகை அல்ல. இத்தெய்வீக மூலிகையை நாம் பயன்படுத்தும போது அற்புத சுகம் அளித்திடும் அருமருந்தாக இருக்கின்றது.

இது ஒரு சிறந்த நோய் எதிர்ப்பு சக்தியைக்கொண்ட மூலிகையாகும். இதனைத் தோல் நோய்களுக்கும் வெளிக்காயங்களுக்கும் கறி மஞ்சளுடன் அரைத்துப் பூசிவர வெளிப்பிரயோகமாக குணமாகும். உணவு ஒவ்வாமையை நீக்கும். மாதம் ஒருமுறை அவித்துக் குடித்தால் இரத்தத்தை சுத்திசெய்து விருத்திசெய்யும். இப்புல்லை மிளகுடன் இடித்து கசாயமிட்டு சிறிதளவு அருந்த உடலில் உள்ள விஷத்தை முறிக்கின்றது.

## அரசு

இதுஒரு தெய்வீக மூலிகையாகும். இதன் துளிர் குளிர்ச்சியைத் தரும். சூக்கில சுரோனித தாதுக்களை அழிகக்கும். கிருமிகளைக் கொல்லும். இதன் இலைக்கொழுந்துக் கசாயம் காலை, மாலை சாப்பிட்டுவர (30மி.லீ) சுரம் நீங்கும். அரசமர வேரின் பொடி தொண்டைப்புண் ஆற்றும் தன்மை உடையது. மரப்பட்டையை எரித்து சாம்பலை எடுத்து தேங்காய் எண்ணையுடன் கலந்து பூசிவர சொறி, சிரங்கு, வேறு புண் என்பன ஆறும். இதன் வேர்ப்பொடியைச் சாம்பிராணியுடன் சேர்த்து புகைத்தால் விஷஜந்துக்கள் வீட்டில் தங்காது. பித்த வெடிப்பிற்கு இதன் தளிரை அரைத்துப் பூசிவர குணமாகும்.

## அகத்தி

உடலின் அகத்தில் உள்ள வெப்பத்தை அகற்றும். கீரைஎன்பதால் அகத்திக் கீரை எனப் பெயர் ஏற்பட்டது. இதில் எல்லா உயிர்ச்சத்துகளும் நிறைவாக உள்ளது. உடலிற்குக் குளிர்ச்சியைத் தரும். குடற்புண்ணை ஆற்றும். இதன் இலை, பூ, காய் மருத்துவக் குணமுடையது. விஷத்தை முறிக்கும். இதனை வாரத்தில் ஒருமுறையாவது உணவில் சேர்த்து வந்தால் வெட்கை நோய், வயிற்றுப் புண், இடு மருந்தின் விஷங்கள் என்பவற்றை முறிக்கும்.

## ஆடாதோடை

இதன் பொதுக்குணமாக புழுக்களை கொல்வதில் வேம்பின் தன்மையை ஒத்தது. இழுப்பு, இருமல், தும்மல், மார்புச்சலி, மார்பில் நீர் கோர்த்தல், காசநோய், முட்டு ஆகிய நோய்களைக் குணமாக்கும். இதன் இலைகளை உலர்த்திய பொடியை நெருப்புத்தணலில் இட்டு புகையை பிடிக்க மூக்குக்கோளாறு தீரும் சளி வெளியேறும்.இரைப்பு குறையும்(இது ஒரு நிரந்தர மருந்தல்ல)

## ஆமணக்கு

இதில் பலவகை உண்டு. இதன் எண்ணை குடலைத் தூய்மையாக்கும். மலச்சிக்கலைப் போக்கும். மூலநோயை நீக்கும்.

## இஞ்சி

இது ஒருவாசனைத் திரவியம். நாளாந்த நடைமுறையில் மக்களிடையே பெரும்பாலும் பாவனையில் உள்ளது. இதன் மருத்துவக்குணங்கள் பல உணவு செமியாமையைப் போக்கும். பித்தத்தை அடக்கும். பசியைத் தூண்டும். வெப்பத்தைத் தரும். தோல்நீக்கிய இஞ்சியை தேனில் ஊறவைத்து காலையில் 5 மி.லீ. தேனுடன் ஒரு துண்டு இஞ்சியை (2 கிராம்) எடுத்து 48 நாட்கள மென்று சாப்பிட்டுவர ஆயுள் பெருகும். நெஞ்சு உரம்பெறும். உடலின் எதிர்ப்பாற்றல் பெருகும். இதனால வாந்தி, மயக்கம், ஆஸ்மா, வாய்வு, ஏப்பம், இருமல், நீரிழிவு, தலைவலி, ஜலதோஷம், வாதநோய்கள், குழந்தைகளின் மந்தம் போன்றவை நீங்கும்.

## உள்ளி

இதை வெள்ளைவெங்காயம், பூண்டு என்றும் கூறுவர். இது இருமல் சம்பந்தமான நோய், பூச்சிக்கடி, புழுத்தொற்றுதலுக்கு சிறந்த மருந்தாகும். மேலும் சுரம், வயிற்றுளைச்சல், கொலரா ஆகியவற்றைப் போக்கும். இதில் உள்ள அலிசின் நெடி (மணம்) பென்சிலினை விட ஆற்றல் உள்ளது. இது இரத்தஅழுத்தம், வாயுக் கோளாறு, நரம்புக் கோளாறு, நீரிழிவு, மாதவிடாய்க் கோளாறுகளுக்கும் சிறந்த மருந்தாகும். உடல் பருமன் குறைய உள்ளியை ஊறுகாயாகவோ. லேகியமாகவோ செய்து சாப்பிட்டுவரலாம்.

## உத்தமாகாணி (வேலிப்பருத்தி)

இது வீக்கத்தைக் கரைக்கும். காக்கைவலிப்பைக் குணமாக்கும். கிருமிகளைக் கொல்லும். சிறு குழந்தைகளின் நோய்களுக்கு ஏற்றது. வாதநோய்களுக்கு பூச்சு மருந்தாக உபயோகிக்கலாம். பெண்களுக்கு வரும் மாதவிடாயின்போது ஏற்படும் இடுப்பு வலிக்கு 5 துளி சாற்றுடன் 10 மி.லீ. தேன் கலந்து கொடுத்து வெந்நீர் அருந்த வலி நீங்கும். மாதவிடாய் ஒழுங்குபடும்.

## ஊமத்தை

இது அனைத்துவகை புண்களையும் ஆற்றும் தன்மை வாய்ந்தது. வீக்கம், கட்டுக்கள் முதலியவற்றை கரைக்கும் தன்மை வாய்ந்தது. இது விடத்தன்மை உடையது. மயக்கத்தை உண்டாக்கும். இதன் பிஞ்சை அவரவர் உமிழ் நீருடன் கரைத்து தடவ புழுவெட்டு நீங்கும். முடிவளரும். வீக்கங்கள், வலி என்பவற்றிற்கு வாட்டிக் கட்ட குணமடையும்.

## எலுமிச்சை

இதை அரசக்கனி என்பர். இதில் பலவகை உண்டு. எல்லாவற்றின் குணமும் ஒன்றுதான். இதன் பொதுவான குணங்களாக பித்தத்தைப் போக்கும். சித்தம் ஆக்கும். அறிவை வளர்க்கும். வாந்தி, விக்கல், வயிற்றோட்டம் ஆகியவற்றைக் குணமாக்கும். பைத்தியம் தெளிவிக்கும். சித்த மருந்துகளில் துணைமருநதாகப் பயன்படும். பிற மருந்துகள் கெடாமல் பாதுகாக்க பயன்படுத்தப்படும். எலுமிச்சை பழச்சாறு, சீனியும், சிறிது உப்பும் சேர்த்து கொடுக்க வாந்தி, வயிற்றோட்டம் நீங்கும். கண்வலி, காதுவலிக்கு இச்சாறு ஒரு துளிவிட குணமாகும். தோல் நோய்களுக்கு இச்சாற்றில் நிலாவரை வேரைஅரைத்து 5-6 நாட்களுக்கு பூசிவரக் குணமாகும்.

## வல்லாரை

இது ஒருகாயகல்ப மூலிகையாகும். இரும்புச்சத்து நிறைந்தது. இதன் பொதுக்குணமாக உடலைத் தேற்றும். முளைவளர்ச்சிக்கு உகந்தது. சுறு சுறுப்பை உண்டாக்கும். இருமல், சலியைப் போக்கும். சிறுநீரைப் பெருக்கும். எரிச்சலைப் போக்கும். நினைவாற்றலைப் பெருக்கும். மந்தத்தைப் போக்கும். தலைமுடி வளர்ச்சிக்கும் கண் குளிர்மைக்கும் உகந்தது. இதைப் பச்சையாக சம்பல் செய்தோ கறியாக சமைத்தோ வாரம் இருமுறையாவது உண்டுவர நலமாகும். இதன் சாறும் பசும் பாலும் 40 நாள் உண்டுவர (காலை. மாலை) பெண்களுக்கு ஏற்படும் வெள்ளைபடுதல், உடல்வேட்கை என்பன தீரும். கிருமிகளைக் கொல்லும்.

## தூதுவளை

இதுஒரு கபத்தைப் போக்கும் தன்மையுடையது. காதுமந்தம், காதுஇரைச்சல் என்பவற்றைப் போக்கும். இதன் இலை, பூ, காய், தண்டு என்பவற்றை உணவாகச் சமைத்து உட்கொள்ளலாம். இதனால் சுரம். இருமல். இளைப்பு, தடிமன். முட்டு முதலியன நீங்கும்.

## கொத்தமல்லி

இது சமையலில் இடம்பெறுவதுடன் மருத்துவக் குணமும் கொண்டது. உடலுக்கும் உடல் உறுப்புகளுக்கும் ஊரம்ஊட்டுவது. அழுகலகற்றுவது, மணமூட்டுவது பித்தத்தைத்தணிக்கும். குளிர்ச்சியைத் தரும். சுரத்தைத் தணிக்கும். விக்கலை நீக்கும். தாது நட்டத்தைப் போக்கும். இதயத்தைப் பலப்படுத்தும். வயிற்றுப்பொருமல், ஏப்பம், நெஞ்செரிவு குணமடையும். கட்டி மூலத்திற்கு கொத்தமல்லியை அரைத்து பற்றிட கட்டிகரையும். மூலம் குணமடையும்.

## குப்பைமேனி

இது எரிப்புக் குணமுடையது. மூல ரோகத்திற்கு ஒரு சிறந்த மூலிகை ஆகும். விஷத்தை முறிக்கும். இதன் இலையுடன் மஞ்சள், உப்பு மூன்றும் சேர்த்து அரைத்துப் பூசிவர சொறி, சிரங்குப்படை எல்லாவகைப் புண்களும் குணமடையும். மேனி அழகுறும்.

## துளசி

இது தெய்வீக மூலிகையாகும். இதில் பலவகையுண்டு. கருந்துளசி மிக்க குணமுடையது. இதன் பொதுவானகுணம் வெப்பத்தைத் தருவது சளியை வெளியேற்றவது பசியைத் தூண்டுவது. இதன் சாறை தலையில் தடவிவர வலிகுறையும். இருமல் முட்டுக்குறையும் இதை தலைப்பேனுக்கு தலையணையில் இலையைப்பரப்பி படுத்துறங்கினால் பேன் ஒழியும். துளசி இலையை குளிர்ந்த நீரில் உறவைத்து பருகிவர சுவாசம் சம்பந்தமான வியாதிகள் குணமாகும்.

## தொட்டால்சிணுங்கி

இது காந்தசக்தி உள்ள மூலிகையாகும். இதை தொடுகின்றபோது அதன் சக்தி மனிதனுள் மின்சாரம் போல் பாயும். 48 நாள் தவறாது நெருட்டிவந்தால் உளஆற்றல் பெருகி மனோசக்தி அதிகமாகி சொன்னது பலிக்கும். நினைத்தது நடக்கும். இதன் இலையை களிமண்ணுடன் அரைத்து பற்றிட வாதவீக்கம் கரையும்.

## நாயுருவி

இது ஒரு தெய்வீகத் தன்மையுள்ளது. இதை அட்டகர்ம மூலிகை என்றும் கூறுவர். சிறுநீர்க் கோளாறுகளை அகற்றுவதில் முதன்மை பெறறது. இது பலவகை நோய்களை குணமாக்கும் ஆற்றல்மிக்கது. இதன இலையை பருப்புடன் சேர்த்து சமைத்து வாரம இருமுறை சாப்பிட்டுவர நுரையீரல் பற்றிய சளி குணமாகும்.

இஞ்சியை நாயுருவி இலையில் பொதித்துவைத்து இஞ்சியை எடுத்துவிட்டு மறுநாள் இந்த இலையை உலர்த்தி தூள் செய்யவும். இதில் 5 கி.அளவு வெந்நீரில் இருவேளை கொடுத்துவர சுரம், சளி, இருமல் குணமாகும்.

## நீர் முள்ளி

நீர்முள்ளி நீர்நிறைந்த இடங்களில் குத்துச்செடியாக வளரும். சிறுநீரைப் போக்கும். எரிவைத் தணிக்கும். கீழ்காய்நெல்லி நெருஞ்சில், நாயுருவி போன்று சிறுநீரைப் பெருக்கும் இன்னும் சிறுநீரடைப்பு தாது விருத்தி முதலியவற்றையும் மாற்றும் தன்மையுடையது.

## நெல்லி மரம்

அமிழ்வினை, தீங்கனி, அவ்வைக் கீந்தான், அதிகன். இக்கனி சகா மருந்தாகும் என்பதை இதனால் அறியலாம். இது சிறந்த காயகல்ப மூலிகையுமாகும். சிறந்த மருத்துவக் குணமுடையதாகும். சிறந்த ஊட்டச்சத்தும் நுரையீரலுக்கு வலிமை தருவது. ஈரல், மண்ணீரல், குருதி மண்டலம் ஆகிவற்றின் குறைபாடுகளை நீக்குவது. மலமிழக்கும். நார்ப்பொருள் உடையது. சிறுநீர் பெருக்குவதில் முருங்கை முள்ளங்கியைப் போன்றது. வெப்பத்தைத் தணிப்பது. நீரிழிவு நோய்க்கு சிறந்தது. (இன்சுலின் சுரப்பை தூண்டுகிறது) இதனால் மேகவெட்டை, வாந்தி, கண்ணெரிவு, தாதுநட்டம், பித்தசுரம் என்பன தீரும். இதனால் செய்யப்பட்ட எண்ணை தலைக்கு வைத்துவர முடி வளரும். இளநரை மாறும். கண்ணெரிச்சல், வெப்பம், குறையும். பொடுகு குணமடையும். மாலைக்கண் குணமாகும். இதனை வெறுவயிற்றில் 48நாள் சாப்பிட்டுவர உடல் ஊட்டம்பெறும்.

## பப்பாளி

இதன் காய், பால், விதை, பழம் மருத்துவக் குணமுடையவை. மிக்க வெப்பத்தைத் தருவது. உயிர்சத்து மிக்கது. மாதவிலக்குத் தடையை நீக்கும். தக்காளிப்பூச்சி, கீரிப்பூச்சிகளை வெளியேற்றும். சிறுநீரைப் பெருக்கும். கொழுப்பைக் கரைத்து உடலை இளைக்க வைக்கும். வாய்ப்புண்ணுக்கு இதன் பாலை தேங்காய் எண்ணைகலந்த பூசிவர குணமடையும். இப்பாலுடன் பொரித்த வெண்காரம் சேர்த்து தடவிவர வேர்க்குரு குணமாகும்.

## பாகல்

இது பித்தம் தணிக்கும். பசியைத் தூண்டும். பலமிழக்கும் பூச்சி கொல்லும். நீரிழிவைப் போக்கும். பிறமருந்துகளின் குணத்தை முறிக்கும். இது பிறமருந்துகளை தவறாக உண்டாலும் பிறர் மருந்து வைத்தாலும் அதை முறித்துவிடும். பாகல இலைச்சாற்றைப் பிழிந்து உள்ளங்கையில் விட்டால் தயிர்போல் துவர்த்து மருந்து உள்ளது என அறியலாம். வெளிமூலத்திற்கு இதன் இலையை ஆமணக்கெண்ணெய் பூசி வாட்டி அசனவாயில் வைத்துக் கட்டத் தீரும். பாகற்காய்ச் சாற்றை தினம் அருந்திவர மது மோகம் குணமாகும்.

## பிரண்டை

பிரண்டை இருவகைப்படும். இது மருத்துவக்குணம் அதிகமுடையது. இதுமூலம், வயிற்றுப்புண், தாது நட்டம் முதலியவற்றைக் குணமாக்கும். இதன் உப்பு சிறந்த குணமுடையது.

## மாதுளை

மாதுளையில் பலவகையுண்டு. இது மருத்துவக் குணமுடையது. உடல் தாதுக்களை கட்டும். பலத்தையும், வித்தையும் கட்டும். வயிற்றுக்கடுப்பு, வயிற்றோட்டம், மாதவிலககில் அதிக குருதிப்போக்கு ஆகியவற்றை நீக்கும். மூக்கால் இரத்தம் வடிவதற்கு மாதுளம் பூச்சாறும், அறுகம்புல்லும் சமஅளவில் கலந்து மூன்றுவேளை கொடுக்க மூக்கால் வடிவது நிக்கும். இதனால் பேதி, வாய்ப்புண், மலக்கழிச்சல், புழுவெட்டு, வயிற்றுப்பூச்சி, மலட்டுத் தன்மை என்பவற்றை நீக்கும். இதன் தூளை கண்நோய்க்கு அவித்து கண்ணைக் கழுவிவர நோய் குணமாகும்.

## முருங்கை

இதை பிரம்ப விருட்சம் என்பர். விந்து உற்பத்திசெய்து ஆண்மைக் குறைபாட்டை நீக்கும். உடலின் 7 தாதுக்களின் வெப்பத்தையும் தணிக்கும். சிறுநீரைப் பெருக்கும். சளியை அகற்றும். நரம்புக் கசிவுகளைத் தடுக்கும். இது இரும்புச் சத்து மிகுதியானது. குருதியை தூய்மையாக்கும். இதன் இலையை வறுத்து சாப்பிட பித்தமயக்கம், மலச்சிக்கல், கண்நோய், கபம், மந்தம் தீரும். குழந்தைகளுக்கு ஊட்டத்தைக் கொடுக்கும். உடல் [illegible] அசதியைப் போக்கும்.

## முள்முருங்கு

இதனை கல்யாண முருங்கை என்றும் கூறுவர். இதன் பொதுவான குணம் வாந்தி. வயிற்றுவலி, பித்தசுரம், மலச்சிக்கல், உடல்வெப்பம். வேர்க்காடு, வயிற்றுப்புழு ஆகியவற்றை நீக்கும். மாதவிடாய் [illegible] சீதபேதி. மலக்கிருமி [illegible] கடுப்பு, சொறி. சிரங்கு. அஸ்மா என்பவற்றை நீக்கும். பூச்சிகளைக் கொல்லும். சருமவியாதிக[illegible] கொல்லும்.

## மணித்தக்காளி

கீரைவகை[illegible] மிகவும் சிறந்ததாகும். இதன் [illegible] வயிற்றுப்புண்ணைக் கொல்லும். கறிசமைத்துச் சாப்பிட குளிர்ச்சியைத் தரும். மலக்கிருமி[illegible] கொல்லும்.மலச்சிக்கலைத் தவிர்க்கும். கண்ணிற்கு நல்லது. உடல்வெப்பத்தைத் தணிக்கும். மூலநோய் நீரிழிவு. உடல் ஊளைச்சதை[illegible]யும் கரைத்து விடும். சிறுநீரகக் கோளாறு நீக்கும். சளியை அகற்றும்.

நாம் எமது அன்றாட சமையலில் பயன்படுத்தும் எல்லா வகை வாசனைப் பொருட்களும் பலவகையான மருத்துவக் குணங்களை உடையது.

எமது மண்ணில் எண்ணற்ற மூலிகைகள் இருக்கின்றன. அவற்றில் சிலவற்றைத் தான் நாம் அறிந்து நமது அன்றாட வாழ்க்கைக்கு உணவாகவும் மருந்து ரீதியாகவும் உபயோகிக்கின்றோம். ஏனையவை புல், பூண்டு என்ற பெயரோடு அழிந்து போகின்றன. மிருக இனத்தில் ஆடு பொதுவாக ஆடு தீண்டாபபாலை என்னும் ஒரு மூலிகையைத் தவிர ஏனைய வற்றை எல்லாம் சாப்பிட்டு தனது ஆட்டுப்பாலை நோய்க்கு மிகவும் உயர்ந்த ஒரு பொருளாகவும், ஊட்டச்சத்துடன் மக்களுக்கு கொடுக்கும். பொதுவாக சப்த தீவுகளில் பெரும் தொகையான மூலிகை வளங்கள் உண்டு. அவை அந்தக் காலத்தில் பாவனைக்கு வைத்தியர்களால் பிரயோசனப்படுத்தப்பட்டன. ஆனால் இன்று நமது நாட்டுச் சூழ்நிலையில் மக்கள் இடம் பெயர்ந்து போய் எல்லா மூலிகைகளும் அழிந்துபோய் விட்டன. ஆனாலும் சித்தமருத்துவம் [illegible]றும் வளர்ந்து மக்களுக்கு பெரும் நன்மைகள்செய்து செழிப்படையும் என்பது திண்ணம்.

## அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் இன்று

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்திற்கெதிரான ஆர்ப்பாட்டம் ஒன்று ஜே.வி.பி.யின் ஏற்பாட்டில் இன்று கொழும்பில் இடம்பெறவுள்ளது. 10 நாள் வேலைத்திட்டம் என்ற பெயரில் சகல பகுதிகளுக்கும் வீடு வீடாகச் சென்று அரசிற்கெதிராக பிரசாரம் செய்யும் நடவடிக்கையையும் கடந்த [illegible]யன்று ஜே.வி.பி. ஆரம்பித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

(உ)

## இன்று ஒரு தகவல்

# உடலுக்கு உதவுங்கள்

இந்த உலகில் தூங்கிக் கெட்டுப்போனவர்களும் உண்டு. தூங்காமல் கெட்டுப்போனவர்களும் உண்டு. விழித்திருக்க வேண்டிய நேரத்தில் தூங்குவதும் தவறு. தூங்கவேண்டிய நேரத்தில் விழித்திருப்பதும் தவறு. ஒரு பலசரக்கு கடைக்குப் பொருட்கள் வாங்கச் செல்கின்றீர்கள். அங்குள்ள ஊழியன் ''கொஞ்சம் காத்திருங்கள் முதலாளி தூங்கிக்கொண்டு இருக்கின்றார், விழித்தும் உங்களுக்குத் தேவையான பொருட்களை வாங்கலாம்'' என்று கூறினால் அங்கு வியாபாரம் எப்படி நடைபெறும்.

இரவு முழுவதும் நித்திரை செய்யாது விழித்திருந்துவிட்டு காலையில் கிளம்பி காரைச் செலுத்திக்கொண்டு கிளிநொச்சிக்குச் செல்கிறேன் என்று போனால், அவர் என்ன கிளிநொச்சிக்கா செல்வார். வேறெங்காவது தான் செல்வார். அமெரிக்காவில் நடந்த ஒரு ஆய்வின்படி சாலை விபத்துக்கள் குறித்த சில நேரங்களில் தான் அதிகம் நடக்கின்றதாம்! அதாவது அதிகாலை 2 மணியிலிருந்து காலை 7 மணி வரை. அதன் பின்பு பி.ப 2.மணியிலிருந்து மாலை 5மணி வரைக்கும்.

ஏன் இப்படி? சில விஞ்ஞானிகள் என்ன கூறுகின்றனர் எனில், இந்த நேரங்களில் நரம்பு மண்டலங்களின் செயற்பாடு சிறிது குறைச்சலாக இருக்குமாம். அதனால் இந்தச் சமயங்களில் எந்த வேலை செய்தாலும் அதில் கவனக்குறைவு இருக்கும். தீர்மானம் எடுக்கும் திறமையும் சிறிது குறைவாகவே இருக்கும்.

மேற்கு ஜேர்மனியில் இரு ஆராய்ச்சியாளர்கள் இவற்றைப்பற்றி சில விபரங்களைக் கண்டு பிடித்துள்ளனர். மதிய வேளைகளில் உடலின் உஷ்ணம் சிறிது குறையுமாம். அதாவது Basal Metabalic Rate சிறிது குறைந்து உடல் ஓய்வு எடுக்கத் தயாராக இருக்கும். அதனால் அந்த நேரத்தில் ஓய்வெடுப்பதே நல்லது.

ஒரு மனிதன் எவ்வளவு நேரம் நித்திரை செய்ய வேண்டும் என்பதற்கும் அளவுஉண்டு. பிறந்த குழ்ந்தைகள் 18லிருந்து 20 மணி நேரம் தூங்கவேண்டும். பள்ளி செல்லும் சிறுவர்கள் 12லிருந்து 14 மணிநேரம் தூங்க வேண்டும். பள்ளிக்கூடத்தில் இல்லை போய்விட்டு வந்த பின் வீட்டிலே! பெரியவர்கள் 7லிருந்து 9 மணி நேரம் தூங்கவேண்டும்.

பொதுவாக யாருக்கு தூக்கம் கெட்டுப்போகின்றது தெரியுமா? Shift இல் வேலைசெய்பவர்களுக்குத்தான். Night Shift இல் வேலைசெய்து விட்டு காலையில் வீடு திரும்பியவுடன் நித்திரை செய்ய முடியாமல் வேறு வேலைக்குச் செல்பவர்கள் எத்தனை பேர்? நாம்முதலில் கூறியது போல் நரம்பு மண்டலம் குறைவாக செயற்படும்நேரங்களில் தான் மிகவும் சுறுசுறுப்பாக வேலைசெய்ய வேண்டியிருக்கும். என்ன செய்வது? வாகன ஓட்டுநர்கள் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். ஆராய்ச்சியாளர்கள் கூறியிருக்கும் யோசனைகளைக் கடைப்பிடிக்கவேண்டும்.

முதலில்ஒன்றைத் தெரிந்து கொள்ளுங்கள். காலையில்8 மணித்தியாலம் தூங்குவதாக இருப்பின், இரவு 8மணி நேரம் தூங்குவதற்கு அது சமனானது என எடுக்கக்கூடாது. Shift Duty யில் உள்ளவர்கள் வேறொரு விடயத்தையும் கவனிக்க வேண்டும். இவர்களது கடமை வாரத்தின் முழுவதிலும் ஒரே மாதிரியாக இருக்கவேண்டும். அதாவது ஒரு வாரம் முழுவதிலும் முதல் Shift அடுத்தவாரம் 2 வது Shift. அடுத்தவாரம் 3வது Shift இப்படி அமைய வேண்டும். இதற்கான விஞ்ஞான விளக்கமும் உள்ளது. ஒவ்வொரு மனித உடலிலும் ஒரு மெக்கானிசம் உண்டு. Biological Clock அது இருப்பதனால்தான் குறித்த நேரத்தில் நித்திரையும், குறித்தநேரத்தில் விழிப்பும் வருகின்றது. Shift ஐ உங்கள் இஷ்டப்படி மாற்றிக்கொண்டிருந்தால் உடல் மிகவும் சிரமப்படும். குறைந்தது ஒரு வாரத்திற்காவது ஒரே மாதிரி Shiftல் இருக்கவேண்டும்.

ஆகநேரத்தைக் கூட நமது உடம்பிற்கு ஏற்ற முறையில் உபயோகப் படுத்தவேண்டும். இதற்கு Chrono Hygiene என்று பெயர் வைத்துள்ளனர். Shiftல் வேலை புரிபவர்கள் கவனத்தில் வைத்துக்கொள்ளவேண்டும் என்று விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். அவற்றைக் கூறுகிறேன். கவனித்துக்கொள்ளுங்கள் .

உடலுக்குத்தேவையான அளவு தூங்க வேண்டும். சத்துள்ள உணவு உண்ணவேண்டும். தவறாது உடற்பயிற்சி செய்ய வேண்டும். இரவில் கொழுப்பு உணவுகளை உண்ணக்கூடாது. ஏனெனில் அந்த நேரம் ஜீரண சக்தி குறைவாக இருக்கும். இவற்றை முக்கியமாக வாகன ஓட்டுநர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும். விபத்துக்களை இவற்றின் மூலம் தவிர்க்கலாம்.

அதிகாலை நேரத்தில் ஒரு பஸ் வேகமாகச் சென்று கொண்டிருந்தது. அதில் தெய்வீகப் பிரசாரம் செய்யும் பெரியவர் ஒருவரும் போய்க்கொண்டிருந்தார். திடீரென அந்தப் பஸ் ஆற்றில் விழுந்து மூழ்கி விட்டது. அந்த பஸ் ஓட்டுநர் சொர்க்கத்திற்கும், அந்தப் பெரியவர் நரகத்திற்கும் சென்று விட்டனர். இது ஏனென்று யாருக்கும் விளங்கவில்லை. அந்தப்பெரியவர் பொறுக்கமுடியாமல் கடவுளிடம் சென்று முறையிட்டார். ''கடவுளே! இது என்ன அநியாயம்! நான் வாழ்நாள் முழுதும் தெய்வீகப் பிரசாரம் செய்துகொண்டிருந்தேன். என்னால் தான் பலர் உங்களை நினைக்கின்றனர். அந்தாள் குடிபோதையில் கண் விழித்து வண்டி செலுத்திக் கவிழ்த்தவர். அவரை சொர்க்கத்திற்கு அனுப்பிவிட்டீர்களே'' என்றார். அதற்கு கடவுள் கூறினார். ''நீ பிரசங்கம் செய்யும் போது மக்கள் தூங்கிக்கொண்டிருந்தனர். ஆனால் அந்த ஓட்டுநர் வாகனம் செலுத்தும் போது அதில் பிரயாணம் செய்யும் அனைவரும் என்னைத் பிரார்த்தனை செய்வார்கள். நல்ல விதமாகப் போய்ச் சேரவேண்டும் என்று. உங்களை விட அவர் தான் மக்களிடம் என் நினைவை உருவாக்கியவர். அதனால் தான் இப்படிச் செய்தேன்'' என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# தொழுநோய்க் கட்டுப்பாட்டுச் சிகிச்சை வட கிழக்கிற்கு விஸ்தரிப்பு

(கொழும்பு)

தொழுநோய்க் கட்டுப்பாட்டு ஆரம்ப செயற்றிட்டங்களை வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கும் விஸ்தரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கான விசேட கருத்திட்டங்கள் சுகாதார அமைச்சினாலும் மாகாண நிர்வாக அதிகார சபையினாலும் கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ளதுடன், இது தொடர்பான இணைப்புப் பயிற்சிப்பட்டறைகள் கொழுமபு ,வவுனியா, முல்லைத்தீவு,மன்னார் ஆகிய இடங்களில விரைவில் நடத்தப்படவுள்ளன.

வடக்கு-கிழக்கு மாகாண மக்களிற்கு தொழுநோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலான தமிழ் மொழி மூல துண்டுப் பிரசுரமும் விரைவில் மக்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளது.

அத்துடன்,தொழுநோய்க்கான மருந்து வகைகளும் வடக்கு-கிழக்கிலுள்ள சுகாதார நிலையங்களுக்கு இலவசமாக விநியோகிக்கப்பட்டுள்ளதுடன்,மேலும் ஒரு தொகை மருந்துகள் அனுப்பி வைக்கப்படவுள்ளன.(உ-10)

## இடைக்கால நிர்வாகசபை பிரேரணைகள் குறித்து

# தமிழ்ச் செல்வன் தலைமையிலான குழு பிரான்ஸ் தலைநகரில் கூடி ஆராயும்

(கொழும்பு)

இடைக்கால நிர்வாகம் தொடர்பான அரசாங்கத்தின் மிகப்பிந்திய பிரேரணைகள் இம்மாத இறுதியில் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் விடுதலைப்புலிகளின் சட்டத்துறை மற்றும் அரசியற்துறை நிபுணர்களால் ஆராயப்படும்போது, அதில் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் கலந்து கொள்ள மாட்டார் என்று தெரியவருகிறது.

பதிலாக சு.ப. தமிழ்ச்செல்வனே அக்கூட்டத்திற்கு தலைமை வகிப்பார் என்றும் அங்கு செல்லும் தமிழ்ச்செல்வனுடன் புலித்தேவனும் இணைந்து கொள்வார் என்றும் அன்ரன் பாலசிங்கத்தின் உடல் நலக் குறைபாடுகள் இதற்கு காரணம் என்றும் கூறப்படுகிறது.

பாரிஸ் நகரில் விடுதலைப் புலிகள் கூட்டம் நடத்துவதற்கு பிரான்ஸ அனுமதி வழங்கியுள்ளது என்றும், சமாதானத் திட்டத்தை தாம் ஆதாரிப்பது என்னும் கொள்ளையின் அடிப்படையிலேயே தாம் இதனை அனுமதிக்க முன்வந்ததாகவும் கொழும்பிலுள்ள பிரான்ஸ் தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசிற்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படுவதை பிரான்ஸ் ஊக்குவிக்கின்றது. அவ்வாறு தாம் தீர்மானித்தமைக்கு காரணம் சர்வதேசத்தின், குறிப்பாக நோர்வேயினதும், ஜப்பானினதும் அனுசரணை முயற்சிகளை ஆதாரிக்கவேண்டு மென்பத னாலாகும் என்று பிரான்ஸ் தூதரகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

பாரிஸில் நடைபெறும் கூட்டத்தில் விடுதலைப்புலிகளின் சட்ட அறிஞர்கள, தற்காலிக நிர்வாக கவுண் சிலுக்கான அரசாங்கம் முன் வைத்த பிரேரணைகளை ஆராய்வதுடன். அரசாங்கத்திடம் புலிகள் சமர்ப் பிக்கவுள்ள மாற்றுப் பிரேரணைகளையும் ஆராய்வர்.

புலிகளின் மாற்றுப் பிரேரணைகளை அரசாங்கம் இம்மாத இறுதியில் எதிர் பார்க்கின்றது.

அத்துடன்,சமாதானப்பேச்சுக்களும் இம்மாதக் கடைசியில் மீண்டும் தொடங்க வாய்ப்பு ஏற்படும் என்றும் அரசியலாளர்கள் எதிர்பார்ப்பு வெளியிட்டுள்ளனர். (உ)

## இராசி பலன்

**12.08. 2003**

(ஆடி 27, செவ்வாய்க்கிழமை)

பூரணை - மு.ப.10.55 வரை
திருவோணம்-மு.ப. 08.13 வரை
இராகுகாலம் - 03.04- 04.34
சுபநேரம் - 10.34-12.04

4ஆம் ஆடிச் செவ்வாய்

**மேடம்**
அன்பளிப்பு, பெரியோரால் மதிக்கப்படுதல், காரிய சித்தி, தொழில் சிறப்பு.

**இடபம்**
கட்டுப்படுதல், சீரப்பிரயாசை, வயிற்று வலி, முயற்சி தாமதம்.

**மிதுனம்**
எதிர்பாராத மனஸ்தாபம், முழங்காலில் வலி, பொருள் விரயம், காரிய தடங்கல்.

**கடகம்**
போசன சுகம், மனோதைரியம், குடும்ப மகிழ்ச்சி, காரிய நன்மை.

**சிங்கம்**
தொழிலில் ஆர்வம், எடுத்த காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை, உடல் நலம்.

**கன்னி**
அஜீரண ரோகம், மனக்கிலேசம், காரிய நாசம், திடீர் நன்மை.

**துலாம்**
தனவிரயம், ஆரோக்கியக்குறைவு, எடுத்த காரியங்கள் தாமதமாகும், புதிய திருப்பம்.

**விருச்சிகம்**
தனலாபம், முயற்சி பலிதம், மாதர் நட்பு, பிறர் உதவி.

**தனுசு**
கௌரவக் குறைவு, போசனசுகக் குறைவு, காரியதாமதம், தனவிரயம்.

**மகரம்**
நல்லமுயற்சி, வெகுமானம், போசன சுகம், சயன சுகம்.

**கும்பம்**
நிலைக்கேடு பிரயாண அலைச்சல், தொழிலில் ஆர்வம், சயனச்சுகக் குறைவு.

**மீனம்**
ஆனந்தம், புதிய முயற்சி, உறவினரால் நன்மை, பெருமையடைதல்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

# மேஜர் கிண்ணியின் நினைவு மண்டபம் திறக்கப்பட்டது

(கிளிநொச்சி)

சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியிலிருந்து வீரச்சாவடைந்த மேஜர் கிண்ணியின் நினைவு மண்டபத் திறப்பு விழா நிகழ்வுகள் நாகர் கோயிலில் சிறப்புத்தளபதி லெப்ரினன் கேணல் நகுலனின் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ் வின் பொதுச் சுடரினை தளபதி நகுலன் ஏற்றி வைக்க, தேசியக் கொடியினை வட முனைக் கட்டளைத் தளபதிகேணல் தீபன் ஏற்றி வைத்தார். அங்கு வைக்கப் பட்டிருந்த மாவீரர்களின் திருவுருவப் படங்களிற்கு வடபோர் முனைக கட்டளைத் தளபதிகளில் ஒருவரான முகுந்தன் மற்றும் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் தாக்குதல் தளபதிகளில் ஒருவரான பல்லவன் ஆகியோர் மலர்மாலை அணிவித்தனர்.

தொடர்ந்து சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் கொடியினை தளபதி லெப்ரினன் கேணல் கோபித் ஏற்றிவைக்க மேஜர் கிண்ணியின் பெயர்ப் பலகையினை வட முனை கட்டளையகத்தைச் சேர்ந்த லெப் கேணல் அறிவு திரை நீக்கம் செய்து வைத்தார். மண்டபத்தினை லெப் கேணல் வீரமணி திறந்து வைத்தார்.

அவரது திருவுருவப்படத்திற்கு அவரது தாயார் கிண்ணியம்மா ஈகைச் சுடர் ஏற்றி மலர் மாலை அணிவித்தார். தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (பி-5)

## உள்துறை அமைச்சர்

# ஜோன் அமரதுங்க மீனவர் படும் இன்னல்களை நேரில் பார்வை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு நேற்று முன்தினம்வருகை தந்த உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க, குருநகர் யாகப்பர் ஆலயத்தில் நடைபெற்ற திருப்பலி வழிபாட்டில் கலந்து கொண்டார். அத்துடன், ஆலயத்தில் அமைச்சருக்கான வரவேற்பு நிகழ்வு ஒன்றும் இடம்பெற்றது.

இந் நிகழ்வுகளில் கலந்து கொண்ட அமைச்சர் முற்பகல் 11 மணியளவில் யாழ். சிறைச்சாலைக்கு விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகள் பற்றி சிறைச்சாலை ஆணையாளர் ருமீர் மன்சூர், யாழ். சிறைச்சாலை ஆணையாளர் எஸ். சிவபாதசுந்தரம், இந்து சமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன், யாழ். மாவட்ட அரச அதிபர் எஸ்.பத்மநாதன் ஆகியோருடன் கலந்தாலோசித்தார்.

அத்துடன், சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சிறைக் கைதிகளையும் நேரடியாக அமைச்சர் பார்வையிட்டார்.

இதனைத்தொடர்ந்து சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கு விஜயம் செய்து கல்லூரியிலுள்ள கணனிப் பயற்சி மையத்தைப் பார்வையிட்டார்.

பின்னர், குருநகரிலுள்ள உயர் பாதுகாப்பு வலயத்துக்குச் சென்று குருநகர் இறங்குதுறையில் மீனவர்கள் படும் இன்னல்கள் பற்றிக் கேட்டறிந்துகொண்டார். (த-16)

# மருந்துகள் கிடைத்துள்ளன

(வேலணை)

வேலணைப் பிரதேச சபையின் ஆயுள் வேத மருத்துவ மனைக்கு நாவின்ன அரச மருத்தாக்கற் கூட்டுத்தாபனத்திலிருந்து போதியளவு மருந்துகள் வந்து சேர்ந்துள்ளன.

இதுவரை இவ் வைத்தியசாலைக்குப் போதிய மருந்து வகைகள் கிடைக்காமல் இருந்து வந்தகுறை தற்போது தீர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (பி-47)

*முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி*
*ஒல்லாது வானம் பெயல்*
*– குறள்*

# வலம்புரி

## அரசுக்குள் விரிசல்

. ஐக்கிய தேசிய முன்னணி அரசு பதவியேற்று இரண்டு வருடங்கள் நெருங்குகின்றது. எனினும் அரசின் சமாதான முயற்சி எந்தப் பயனுமற்றுக் கிடப்பது மிகப்பெரிய துரதிஷ்டமாகும். ஒரு காலத்தில் சிங்கள ஆட்சியாளர்கள் யுத்தத்தை முன்னெடுப்பதில் மிகத் தீவிரமாக செயற்பட்டனர். அதனால் இனவாதம் விஸ்வரூபம் எடுத்து தாண்டவமாடியது. காலத்திற்கு காலம் இடம்பெறுகின்ற ஆட்சி மாற்றங்களின் போது ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுகின்றவர்கள் இனவாதத் தீக்கு எண்ணெய் ஊற்றி அத்தீயில் குளிர்காய்ந்தனரே தவிர இலங்கைத் தீவைக் காவுகொள்ளும் இனவாதத் தீயை அணைப்பதற்கு அவர்கள் முயலவில்லை.

இதன்காரணமாக எண்ணெய் ஊற்றியவர்களையே இனவாத் தீ எரிக்கத் தொடங்கியது. எனினும் அதனைக் கட்டுப்படுத்தும் தைரியம் ஆட்சியாளர்களிடம் இருக்கவில்லை.

ஆட்சியில் இருப்பவர்கள் இனவாதத் தீயை அணைக்க முற்பட்டால் எதிர்க்கட்சிகள் எண்ணெய் ஊற்றி எரிக்க முற்படும் நிலைமையில் தற்போது இலங்கையின் இனப்பிரச்சினை உள்ளது.

இத்தகையதோர் இக்கட்டான சூழ்நிலையில் நோர்வேயின் அனுசரணையுடன் சமாதான முயற்சிகள் முன்

# மீள்குடியேற ஏதுவாக உயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்படவேண்டும்

## வலி-வடக்கு இடம் பெயர்ந்த மக்கள் உள்துறை அமைச்சருக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்த வலி-வடக்கு மக்கள் படும் இன்னல்கள் குறித்து, வலி வடக்கு இடம் பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசம் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கு மகஜர் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளது.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு, மனித உரிமைகள் ஆணைக் குழு,யு.என்.எச்.சி.ஆர் ஆகியவற்றிடமும் கையளிக்கப்பட்ட இம் மகஜரின் விபரம் முழுமையாக வருமாறு;

வலி-வடக்கிலுள்ள 48 நலன்புரி நிலையங்களை உள்ளடக்கிய வலி-வடக்கு இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசத்தினராகிய நாம் தங்களின் மேலான கவனத்திற்கும்,தங்களின் புரிதலுடனான உடனடிநடவடிக்கைக்கும் பின்வரும் விடயங்களைத் தருகின்றோம்.

கடந்த 15 ஆண்டுகளுக்கு முன் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் நடாத்தப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக தற்போது உயர் பாதுகாப்பு வலயங்கள் என குறிப்பிடப்படும் பிரதேசங்களான பலாலி,மயிலிட்டி, தையிட்டி, காங்கேசனதுறை, ஊறணி, கீரிமலை போன்ற இடங்களில் வாழ்ந்த எமது மக்கள் தமது சொந்த வாழ்விடங்களையும், விவசாய நிலங்களையும்,கடற்றொழிலுக்கான பகுதியையும், கல்விச் சாலைகளையும் வழிபாட்டுத் தலங்களையும் விட்டு எதுவுமற்ற ஏதிலிகளாக இடம் பெயர்ந்து அடிப்படை வசதிகள் எதுவுமற்ற நலன்புரி நிலையங்கள் எனச் சொல்லப்படுகின்ற அகதிமுகாம்களில் அவலவாழ்வு வாழ்ந்து வருகின்றோம்.

எமது நிம்மதியான வாழ்வுக்காக நாம் இதுவரையில் பல போராட்டங்களை, மென்முறை மறியல் போராட்டமாகவும், மகஜர்கள் மூலமும்,முக்கியமானவர்களை நேரடியாக அவைக்கு காண்பித்தும் வாய் மூலமாகவும் தெரியப்படுத்தியுள்ளோம்.இதுவரையில் எமக்குச்சாதகமான தீர்வு எதையும் மேற்கொள்ளவில்லை. முற்றிலும் இராணுவ நலன்சார்ந்த, நலன்புரி சார்ந்த நோக்கில் செயற்படும் அரசாங்கத்தால் மனிதநேயத்தை புறம்தள்ளும் இச்செயற்பாடு வேதனைக்குரியதே.

கடந்த 15 மாதங்களிற்கு முன்பு ஸ்ரீலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கும் இடையில் எழுதப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் எமது அகதிவாழ்வுக்கு முடிவு ஏற்பட்டு, மீள எமது சொந்த இடங்களில் நிம்மதியான ஒருவாழ்வு கிடைக்குமென நம்பியிருந்தோம். ஆனால், அதற்குமாறாக எமக்கு அச்சத்தையும் அவலத்தையும் ஏற்படுத்தும் நடவடிக்கைகளே அரசினாலும் அரசபடையினராலும் முன் னெடுக்கப்படுகின்றன. இதனால் நாம் அரசுமீது கொண்ட நம்பிக்கை பொய்த்து வருகின்றது.

இதுவரை காலமாக எமக்கு அரசினால் இடம் பெயர்ந்தோர் என்ற வகையில் கிடைத்துவரும் ஒரே உதவி உலர் உணவு நிவாரணம் மட்டுமேயாகும்.அது கூட இற்றைவரை எமக்கு ஒரே பெறுமதிக்கு மட்டுமே பொருட்கள் வழங்கப்படுகின்றன. தற்போது பொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ள போதிலும் வழங்கப்பட்டுள்ள முத்திரைகளின் பெறுமதி ஒரே அளவாக இருப்பதனால் எமக்கு கிடைக்கும் பொருட்களின் அளவு குறைந்து கொண்டே வருகின்றது. இதனைக் கூட அரசு உணர்ந்து கொள்வதாக இல்லை. நாம் தற்போது இடம் பெயர்ந்து வாழ்வதனாலே இந்த உதவியை கூட எதிர்பார்த்து இந்த நிவாரணத்தில் தங்கியுள்ளோம். நாம் எமது இடங்களிற்கு செல்ல அனுமதிக்கப்பட்டால் எமக்கு எந்த விதமான வெளிஉதவியையும் எதிர்பார்க்க வேண்டிய தேவை இல்லை. எமது பிரதேசம் செழிப்புடன் வளம்மிக்கது. எமது உழைப்பினாலும் வாழ்வை நாம் மேம்படுத்திக்கொள்வோம்.

* எமது இயல்புவாழ்க்கையை நாம் மேற்கொள்ளும் முகமாக இராணுவ நெருக்குவாரங்கள் நீக்கப்பட வேண்டும்.
* நாம் எமது வாழ்விடங்களுக்கு செல்வதற்குத் தடையாக உள்ள உயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப் படவேண்டும்
* இதன் மூலமே நாம் எமது வாழ்விடங்களுக்குத் திரும்பி, மீள் குடியேற்றங்களை மேற்கொள்ள முடியும். எமது வாழ்க்கையையும் புனரமைத்துக் கொள்ளமுடியும்

மேலும்,எமது அடுத்துவரும் சந்ததியினரும் தமது பாரம்பரிய சொந்த மண்ணில் தமது கல்வி, பண்பாட்டு,பொருளாதார விழுமியங்களைப் பேணி விருத்திசெய்து கொள்வதற்கு தங்களது ஆயுதப்படைகளும் அவர்களது இராணுவ நோக்குகளுமே தடையாக உள்ளன. இத்தடைகள் சமாதானத்திற்கான பாதையில் முட்டுக்கட்டைகள் எனக் கருதப்பட வேண்டும்.இத்தடைகள் அகற்றப்படாது இக்காலகட்டத்திலும் தங்களைப் போன்ற அமைச்சர்கள், உயர்மட்ட அரசாங்க அதிகாரிகள் முதலி யோரது இவ்வகையிலான விஜயங்களை நாம் வெறும் செயற்பாடற்ற ஏமாற்றுவதற்கான சுற்றுலாக்களா கவே கருதுவோம். அத்துடன் இவ்விஜயங்கள் இன்னமும் மக்களாகிய நாம் ஏற்றுக்கொள் வதற்குமில்லை.

எனவேதான், இன்று தமிழ்மக்களின் நிம்மதியான வாழ்வுக்காக தம்மை அர்ப்பணித்து போராடும் எமது மக்களின் பிரதிநிதிகளாகிய தமிழீழ விடுதலைப்புலிகள் நிறைவாகப பங்கெடுக்கும் ஒரு இடைக்கால நிர்வாக அலகினை ஏற்படுத்திக் கொடுக்கும் பட்சத்திலேயே அவர்களின் நிர்வாக முறைமையில் நாம் விரும்பும் நமது மக்களின் அபிலாஷைகள் நிறைவு செய்யப்படும் என்பதில் நாம் அசையாத நம்பிக்கை கொண்டுளளோம்.அவர்கள் மூலம் தான் எமது அவல வாழ்வுக்கு முடிவு கட்ட முடியுமென எதிர்பார்க்கின் றோம்.

எனவே, இடம்பெயர்ந்து வாழும்குடும்பங்களின் அபிலாஷைகளை அவர்களின் நிம்மதியான வாழ்வை மீளப் பெற்றுக்கொள்ளத் தக்கவகையில் உரிய அரசியல்,சமூகப் பொருளாதார நடவடிக்கைகளை மனசுத்தியுடன் எடுத்துத்தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம் என்றுள்ளது. (உ-4)

# இரு நாட்டுக் கடவுச் சீட்டுக்களை வைத்திருந்தவருக்கு விளக்க மறியல்

(கொழும்பு)

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் சட்ட விரோதமான முறையில் இரண்டு கடவுச்சீட்டுக்களை வைத்திருந்த நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கனடாவிலிருந்து விமானம் ... தந்திருந்த இந்த நபர் கனேடிய மற்றும் இலங்கைக் கடவுச் சீட்டுக்களை வைத்திருந்தார்.

இவரது கனேடிய கடவுச்சீட்டுத் தொடர்பாகச் சந்தேகம் கொண்ட பொலிஸார், கனேடியத் தூதரத்துடன் தொடர்பு கொண்டு விசாரணைகளை மேற்கொண்டதில்

இனவாத் தீ எரிக்கத் தொடங்கியது. எனினும் அதனைக் கட்டுப்படுத்தும் தைரியம் ஆட்சியாளர்களிடம் இருக்கவில்லை.

ஆட்சியில் இருப்பவர்கள் இனவாதத் தீயை அணைக்க முற்பட்டால் எதிர்க்கட்சிகள் எண்ணெய் ஊற்றி எரிக்க முற்படும் நிலைமையில் தற்போது இலங்கையின் இனப்பிரச்சினை உள்ளது.

இத்தகையதோர் இக்கட்டான சூழ்நிலையில் நோர்வேயின் அனுசரணையுடன் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டாலும் அதன் நகர்வு இணுவில் மஞ்சம் நகர்ந்தது போல் உள்ளது.

இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் சமாதான முயற்சியில் அரசு கொண்டுள்ள விசுவாசமற்ற தன்மையும், சமாதானத்தை ஏற்படுத்துவதில் காட்டப்படும் தாமதமான போக்குமேயாகும்.

கடந்த கால அனுபவங்களோடு ஒப்புநோக்கின் சமாதான முயற்சியில் பொதுஜன ஐக்கிய முன்னணி கடைப்பிடித்த காலங்கடத்தும் போக்கே சமாதான முயற்சியில் சிக்கலையும், முறிவையும் ஏற்படுத்தியது - இந்த அனுபவத்தின் அடிப்படையில் விரைவு படுத்தப்படவேண்டிய சமாதான முன்னெடுப்பை ஐக்கிய தேசிய முன்னணியும் கடைப்பிடிக்க தவறிவிட்டது.

இதனால் ஐக்கிய தேசிய முன்னணி அரசு முன்னெடுத்துள்ள சமாதான முயற்சி பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளதுடன் அது அரசுக்குள்ளேயே முரண்பட்ட கருத்துக்களையும் தோற்றுவித்துள்ளது. இதன் ஒரு வெளிப்பாடாக அமைச்சர் மிலிந்த மொறகொட பிரதமருக்கு அனுப்பிய கடிதம் அமைந்துள்ளது.

அதாவது சமாதானப் பேச்சுக்களில் இருந்து தன்னை விலக்கி விடுமாறு அமைச்சர் மிலிந்த மொறகொட பிரதமரிடம் கடிதம் மூலம் கோரியிருப்பது அரசுக்குள் விரிசல் ஏற்பட்டுள்ளது என்பதற்கு ஓர் தகுந்த சான்றாகும்.

தையிட்டி, காங்கேசனதுறை, ஊறணி, கீரிமலை போன்ற இடங்களில் வாழ்ந்த எமது மக்கள் தமது சொந்த வாழ்விடங்களையும், விவசாய நிலங்களையும், கடற்றொழிலுக்கான பகுதியையும், கல்விச் சாலைகளையும் வழிபாட்டுத் தலங்களையும் விட்டு எதுவுமற்ற ஏதிலிகளாக இடம் பெயர்ந்து அடிப்படை வசதிகள் எதுவுமற்ற நலன்புரி நிலையங்கள் எனச் சொல்லப்படுகின்ற அகதிமுகாம்களில் அவலவாழ்வு வாழ்ந்து வருகின்றோம்.

எமது நிம்மதியான வாழ்வுக்காக நாம் இதுவரையில் பல போராட்டங்களை, மென்முறை மறியல் போராட்டமாகவும், மகஜர்கள் மூலமும், முக்கியமானவர்களை நேரடியாக அழைத்து காண்பித்தும் வாய்

அரசினால் இடம் பெயர்ந்தோர் என்ற வகையில் கிடைத்துவரும் ஒரே உதவி உலர் உணவு நிவாரணம் மட்டுமேயாகும். அது கூட இற்றை வரை எமக்கு ஒரே பெறுமதிக்கு மட்டுமே பொருட்கள் வழங்கப்படுகின்றன. தற்போது பொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ள போதிலும் வழங்கப்பட்டுள்ள முத்திரைகளின் பெறுமதி ஒரே அளவாக இருப்பதனால் எமக்கு கிடைக்கும் பொருட்களின் அளவு குறைந்து கொண்டே வருகின்றது. இதனைக் கூட அரசு உணர்ந்து கொள்வதாக இல்லை. நாம் தற்போது இடம் பெயர்ந்து வாழ்வதனாலே இந்த உதவியை கூட எதிர்பார்த்து இந்த நிவாரணத்தில் தங்கியுள்ளோம். நாம் எமது இடங்களிற்கு செல்ல அனுமதிக்கப்பட்டால் எமக்கு எந்த விதமான

சமாதானத்திற்கான பாதையில் முட்டுக்கட்டைகள் எனக் கருதப்பட வேண்டும். இத்தடைகள் அகற்றப்படாது

உரிய அரசியல், சமூகப் பொருளாதார நடவடிக்கைகளை மனசுத்தியுடன் எடுத்துத்தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம் என்றுள்ளது. (உ-4)

## இரு நாட்டுக் கடவுச் சீட்டுக்களை வைத்திருந்தவருக்கு விளக்க மறியல்

(கொழும்பு)

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் சட்ட விரோதமான முறையில் இரண்டு கடவுச்சீட்டுக்களை வைத்திருந்த நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கனடாவிலிருந்து விமானம் மூலம் இலங்கைக்கு வருகை தந்திருந்த இந்த நபர் கனேடிய மற்றும் இலங்கைக் கடவுச் சீட்டுக்களை வைத்திருந்தார்.

இவரது கனேடிய கடவுச்சீட்டுத் தொடர்பாகச் சந்தேகம் கொண்ட பொலிஸார், கனேடியத் தூதரத்துடன் தொடர்பு கொண்டு விசாரணைகளை மேற்கொண்டதில் கனேடிய கடவுச்சீட்டு போலியானது என கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

(த-3)

## அமைச்சர் ஜோனின் யாழ். விஜயம் வெற்றிகரமாக நிறைவேறியது

### அவரின் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவினதும் ஏனைய சிரேஷ்ட அதிகாரிகளினதும் யாழ்ப்பாண விஜயம் வெற்றிகரமாக நிறைவேறியதாக அமைச்சின் செயலாளர் எம்.எல்.யுனைட் தெரிவித்துள்ளார்

உள்துறை அமைச்சின் யாழ்ப்பாண விஜயம் குறித்து, கொழும்பில் ஊடகம் ஒன்றிற்குக் கருத்துக் கூறுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் இது பற்றி மேலும் கூறுகையில்; உள்துறை அமைச்சின் கீழ்வரும் நிறுவனங்களின் பிரச்சினைகளை இனங்காண்பதற்கும் அவற்றிற்குத் தீர்வுகாண்பதற்கான வழிவகைகளை ஆரய்வதற்கும், யாழ்ப்பாண மக்களின் குறைபாடுகளை அறிந்து கொள்வதற்குமாக அமைச்சாின் யாழ். விஜயம் அமைந்தது.

இவ் விஜயத்தின் போது, அமைச்சர் ஜோன் அமரதுங்காவை யும் அவருடன் சென்ற சிரேஷ்ட அதிகாரிகளையும், யாழ்ப்பாண மக்கள் அன்போடு வரவேற்றனர். அவர்களின் வரவேற்பிற்கு எந்த விதத்தடையும் இருக்கவில்லை.

இருப்பினும் அங்கு தங்கியிருக்க போதிய கால அவகாசம் அரசினால் வழங்கப்படாதமையினால் அமைச்சரும் அதிகாரிகளும் திட்டமிட்டபடி எல்லா இடங்களுக்கும் செல்ல முடியவில்லை.

எனவே, இந்த இடங்களுக்கான விஜயம் பற்றிய திகதி குறித்து பின்னர் அறிவிக்கபப்படும் என்றார்.

(உ-10)

## செபமாலைப் பேரணி

(யாழ்ப்பாணம்)

நாட்டில் இடம்பெற்றுவரும் வன்செயல்கள் ஓய்ந்து, மக்கள் அனைவரும் ஒற்றுமையாகவும் சுபீட்சமாகவும் வாழவேண்டி மாபெரும் செபமாலைப் பேரணியொன்று எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயத்தில் காலை 6.30 மணிக்கு திருப்பலியுடன் ஆரம்பமாகும் இப்பேரணி பி.ப 2.30 மணியளவில அங்கிருந்து புறப்பட்டு பலாலி வீதியூடாக நீர்வேலி ,பரலோக அன்னை ஆலயத்தைச் சென்றடையும்.

(உ-18)

## கதிர்காமத் திருத்தலத்தில் நீர்வெட்டு நிகழ்வு இன்று

### பக்தர் கூட்டம் படையெடுப்பு

(கொழும்பு)

கதிர்காம ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தின் இறுதிநாள் நிகழ்வான ''நீர் வெட்டுநிகழ்வு'' இன்று நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் கலந்து கொள்ள வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இருந்து இலட்சக்கணக்கான பாத யாத்திரிகர்கள் சென்றுள்ளனர்.

அத்துடன், பெருமளவு தென்னிலங்கை மக்களும் வெளிநாட்டவர்களும் கதிர்காம ஆலயத்தின் திருவிழாவில் கலந்து கொள்வதாகவும் சென்ற ஆண்டுகளை விட இவ்வாண்டில் அதிகமான பக்தர்கள் ஆலயத்துக்கு வருகை தந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(உ-10)

## தினசரி தியானம்

### மாயையை வெல்லுதல்

மலரில் உட்கார்ந்து தேனை உறிஞ்சிவிட்டுச் சிறிதும் பாதிக்கப்படாமல் பறந்துசெல்லும் தேனீ போல, நீங்கள் நடந்து கொள்ள வேண்டும். இவ்வுலகில் வாழும்போது இல்லறத்தால் கேடுறாதபடி நடந்துகொள்ள வேண்டும். நீங்கள் இல்லறத்தில் இருக்கலாம். ஆனால் இல்லறம் உங்களை ஆட்சிசெய்யக்கூடாது. எப்போதும் விழிப்புடன் இருக்க வேண்டும். மன அபிலாஷைகளை உணிைப்புடன் கவனித்துவரவேண்டும். கர்த்தனைகளைப்பாடுதல், தனனலமற்ற தொண்டு,விவேகம் மற்றும் வைராக்கியத்தை வளர்த்தல் போன்ற ஆன்மீகப் பயிற்சிகளை மேற்கொண்டால் மாயையை எளிதில் வெல்லலாம்.

சுவாமி சிவானந்தர்

## பத்திரிகையியல் பயிற்சிப்பட்டறை

(கொழும்பு)

கொள்கை மாற்றீடு நடுவப்பணியகமும் இலங்கை மன்றக் கல்லூரியும் இணைந்து தற்கொலை-உணர்வைத்தூண்டல் பத்திரிகையியல் என்ற தலைப்பில் பயிற்சிப் பட்டறை ஒன்றை இம் மாதம் 27 ஆம் திகதி கொழும்பில் நடத்தவிருக்கின்றது.

இக் கருததரங்கின் பெறுபேறுகள் கைநூலாகத் தயாரிக்கப்படுவதுடன், அதன் தமிழ்-சிங்கள மொழிபெயர்ப்புகளும் வழங்கப்படும். (பி)

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்



## நிதி ஒதுக்கப்பட்டபோதும்

# அல்லைப்பிட்டி - மண்டைதீவு வீதியைத் திருத்தமுடியாத நிலை

(வேலணை)

அல்லைப்பிட்டி, மண்டைதீவு வீதியினைத் திருத்தி அமைப்பதற்காக 5இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ள போதும், தற்பொழுது அதனைத் திருத்தமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இவ் வீதியைக் கடற்படை உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தி இருப்பதனாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வீதி புனரமைப்புச் செய்யப்படாமையால், அல்லைப்பிட்டியில் இருந்து மண்டைதீவுக்கு குடிநீர் விநியோகம் செய்யமுடியாதுள்ளது.

மணடைதீவுப் பகுதியில் மீளவும் மக்கள் குடியேறியுள்ளதனால், அல்லைப்பிட்டி - மண்டைதீவு வீதி புனரமைப்புச் செய்யவேண்டிய அவசர நிலை ஏற்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-47)

## மண்டைதீவில் மரதன் ஓட்டம்

(மண்டைதீவு)

மண்டைதீவு இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்தும் விளையாட்டுச் சுற்றுப்போட்டித் தொடரில்

எதிர்வரும் 15ந் திகதி மரதன் ஓட்டமும்,

17ந் திகதி சைக்கிள் ஓட்டமும் இடம்பெறவுள்ளது.

இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்புபவர்கள் கழகத் தலைவர் அ.ராதாகிருஸ்ணன், கழகச் செயலாளர் கு.வதனராஜா ஆகியோருடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ந)

## வேற்றுநாட்டு யுவதிகள் மன்னாரில் கைது

(மன்னார்)

வெளிநாட்டைச் சேர்ந்த இரு யுவதிகள் நேற்று முன்தினம் மன்னாரில் வைத்துப பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகத்திற்கிடமான முறையில் மன்னாரில் நடமாடியதாலேயே இவர்களைக கைது செய்துள்ளதாக மன்னார்ப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். டயனா ஒம்யுஹா (வயது 21) ஓஸோ யூலியன் (வயது - 24) ஆகிய இருவருமே கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ந-5)

## உலக வங்கி 90 கோடி ரூபா வழங்கியது

(கொழும்பு)

ஆங்கில ஆசிரியர்களுக்கு நிலவும் தட்டுப்பாட்டை நீக்க இலங்கை அரசுக்கு உலக வங்கி 90 கோடி ரூபாவை வழங்கியுள்ளது.

இந்நிதியைப் பயன்படுத்தி ஆங்கிலப் பாடப் போதனைத் திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கும் ஆங்கில ஆசிரியர்களை நியமிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார். (இ-5)

# வடக்குக் கிழக்கு நீதிமன்றங்கள் விரைவில் புனரமைக்கப்படும்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள நீதிமன்றக் கட்டடங்கள் அனைத்தையும் இவ்வருடத்திற்குள் புனரமைக்க நீதியமைச்சு திட்டமிட்டுள்ளது.

உலக வங்கியின் நிதியுதவியின் கீழ் யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலையில் புதிய நீதிமன்ற கட்டடத் தொகுதிகள் அமைப்பதற்கான நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தெரிவித்துள்ளார்.

இக்கட்டடத் தொகுதிகள் அமைக்கப்பட்டதும் நீதிவான் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், மேல் நீதிமன்றம் என்பன ஒரே இடத்தில் இயங்கும்.

இதேவேளை வடக்கு கிழக்கு பகுதிகளில் பணியாற்றும் நீதிபதிகளுக்கான உத்தியோக பூர்வ வாசஸ்தலங்களும் விரைவில் அமைக்கப்படும் என்றும் பிரதம நீதியரசர் தெரிவித்துள்ளார் .(ந-3)

---

## புலிகளின்...

களின் சட்ட வல்லுநர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

அரசின் இடைக்கால நிர்வாக சபைத் திட்ட வரைபு குறித்து புலிகளின் சட்ட வல்லுநர்களுடன் அரசியல்ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் ஆகியோர் ஆலோசனை நடத்தி அங்கு எடுக்கப்படும் தீர்மானங்கள் தலைவர் பிரபாகரனுடன் ஆராயப்பட்டு அதன்பின்னரே முடிவுகள் அரசாங்கத்திற்கு அறிவிக்கப்படவுள்ளது.

இடைக்கால நிர்வாகசபை தொடர்பான திட்ட வரைபிற்குரிய பதிலை விடுதலைப்புலிகள் அரசுக்கு அனுப்பி வைததபின் அதனை அரசாங்கம் பரிசீலனை செய்யுமென்றும் அதன்பின்னர் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான அடுத்த கட்ட சமாதானப் பேச்சு செம்ரெம்பர் மாத நடுப்பகுதியில் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ம)

(மற்றொரு செய்தி 8ஆம் பக்கத்தில்)

A/L 2004 DAY CLASS
(கலை; வர்த்தகப் பிரிவுகள்)
ஆரம்பம்
கலை - 16.08.2003 சனி
வர்த்தகம் - 18.08.2003 திங்கள்
8.30 (மு.ப.)
DMI
யாழ்நகர்
(C/6557)

# இந்திய மீனவர்களின்...

மீனவர்கள் தமது தொழிலை மேற்கொள்ளுவதில் சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பகுதிக்குள் புகுந்து தொழிலில் ஈடுபடுமபோது, கடற்படை கண்டும காணாதும் உள்ளது. இதனால், கடற்படையின் வேலையை இலங்கை மீனவர்கள் செய்யவேண்டியுள்ளது.

வடக்கு மீனவர்களைப் பொறுத்தவரையில் கடற்றொழிலுக்குச் செல்லும் நேரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் இருப்பதனால், அதனைக் காரணங்காட்டிக் கடற்படையினர் அவர்களுக்கு வழங்கும் நேரத்தை வரையறுத்துள்ளனர்.

யுததகாலத்தில் அவர்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கித் தமது தொழிலை திறமையாகச் செய்த போதிலும், தற்போதைய அமைதியான காலத்திலும் கூட அவர்கள் இன்னல்களைச் சந்தித்து தமது தொழிலை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

வடபகுதி மீனவர்களின் சொத்தாக இருக்கும் கடல் வளத்தை இந்திய மீனவர்கள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்து, ஒரு நாளில் 200ற்கும் மேற்பட்ட படகுகளில் வந்து இலஙகைக் கடல் வளத்தைச் சூறையாடுகின்றனர். இதன்ால், இரு தரப்பினருக்குமிடையில் மோதல்கள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படுகிறது.

இதேவேளை, சுழிபுரத்தில் வைத்து இந்திய மீனவர்களைப் பிடித்த சுழிபுரம் மீனவர்களின் நான்கு அடையாள அட்டைகள் கடற்படையினரால் பறிக்கப்பட்டுள்ளது. இது மிகவும் கவலைக்குரிய விடயம். இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதற்கு இடமளிக்கக்கூடாது.

இந்திய மீனவர்களின் அடாவடித்தனங்கள் தொடர்பாக, கடற்படை உயர் அதிகாரிகள். போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கு ஏற்கனவே வடக்கு மீனவர்களால் மகஜர் மற்றும் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எனினும் இன்றுவரை எவரும் தீர்வை ஏற்படுத்த முன்வரவில்லை. இது மிகவும் கவலைக்குரிய விடயமாகும் என்றும் அவர் தெரிவித்தார். (ந-5)

---

## சர்வதேச...

நடத்தியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தரை வழி மார்க்கமாக கிளிநொச்சி சென்ற ஜிலமிகாட்டா கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் நடுவகப் பணியகத்தில் நேற்று மு.ப. 11 மணிக்கு சு.ப.தமிழ்ச்செல்வனை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இச்சந்திப்பில், தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தின் இணைப்பாளர் புலித்தேவனும் கலந்துகொண்டார்.

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியாக ஜிலமிகாட்டர் நியமனம் பெற்ற பின் நடைபெற்ற முதலாவது சந்திப்பு இதுவாகும். (வ)

---

## இடைக்கால...

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வடக்குக் கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகசபையை அரசு விடுதலைப் புலிகளுக்கு வழங்குவதை எதிர்த்து ஜே.வி.பி. நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டஙகளையும், வீடு வீடாகச் சென்று பிரசாரங்களையும் செய்து வருவதைத தொடர்ந்து இன்று கொழும்பில் மாபெரும் ஆர்ப்பாட்டத்தை நடத்தவுள்ளது.

கொழும்பு நகரில் இன்று நடைபெறவுள்ள ஆர்ப்பாட்டத்தில் சுமார் 50 ஆயிரம் மக்கள் ஒன்றுதிரள்வர் என்றும, இதேபோல் ஏனைய முக்கிய நகரங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுத்துச் செல்லப்படும் எனவும் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் தெரிவித்துள்ளார். (ம)

---

## சைக்கிள்...

இருவர் காயமடைந்துள்ளனர். இதில அம்புலன்ஸ் வண்டியும் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானது. இவ் விபத்தில் காண்டீபன் (வயது-20) கம்ஜா (வயது - 21) ஆகிய இருவரும் காயமடைந்துள்ளனர். (இ-5)

இவர்களைக் கைது செய்துள்ளதாக மன்னாரப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். டயனா ஒம்யுஹா (வயது 21) ஓஸோ யூலியன் (வயது - 24) ஆகிய இருவருமே கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ந-5)

னர் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான அடுத்த கட்ட சமாதானப் பேச்சு செப்ரெம்பர் மாத நடுப்பகுதியில் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ம)

(மற்றொரு செய்தி 8ஆம் பக்கத்தில்)


கலை - 16.08.2003 சனி
வர்த்தகம் - 18.08.2003 திங்கள் } 8.30 (மு.ப.)
DMI
யாழ்நகர்
(C/6557)


லகத்தின் இணைப்பாளர் புலித்தேவனும் கலந்துகொண்டார்.

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியாக ஜிலமிகாட்டர் நியமனம் பெற்ற பின் நடைபெற்ற முதலாவது சந்திப்பு இதுவாகும். (வ)

இருவர் காயமடைந்துள்ளனர். இதில அம்புலன்ஸ் வண்டியும் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானது. இவ் விபத்தில் காண்டீபன் (வயது-20) கம்ஜா (வயது - 21) ஆகிய இருவரும் காயமடைந்துள்ளனர். (இ-5)


# உங்கள் வலம்புரியின் வாரமலர்




## சங்குநாதம்

* ‘இராமா’ வாஜ்பாயைக் காப்பாற்று.
* மிதிவெடிதந்த அபாயம்.
* பண்டா-ஜே.ஆர். காட்டிய பாதையில் விமல் வீரவன்ச
* இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் இலங்கை வருவது ஏன்?
* ஆலடி மாநாடு.
* வியாசரின் பதில்கள்.
* செங்கை ஆழியானின் ஈழராஜா எல்லாளன் (தொடர் நவீனம்)
* பொன்.கணேசமூர்த்தியின் கடிவாளம் இல்லாத கனவு (நெடுங்கதை)

இன்னும் பற்பல...

வாசிக்கத் தவறாதீர்கள் திங்கள் வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது

விலை ரூபா 14.00

## சங்குநாதம்


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.08.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.